பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தாராபாரதி விலை அணா ஒன்று

குடியரசு

வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1—12
வேளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்
ம. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங்1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ தனி விசிதமும் உண்டு.

மலை 2 | ஈரோடு, அக்ஷய-வரு மாசி-மீ 23-உ (6—3—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 45.

மின்சார ரசம்.

எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமும் மில்லை. எவ்வித பத்தியமும் மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

ஜஸ்டிஸ் திருநாள்.

திருப்பூரில் தென்னிந்திய தலவுரிமை சுயமரியாதைச் சங்கத் திறப்பு.

26-2 27 மாலை 6 மணிக்கு பிரபல கத்தர் வியாபாரி திரு. மா. வெ. கருப்பண்ண செட்டியார் கத்தர் சாலையில், முனிசிபல் கவுன்சிலர் திரு. கே. வெங்கிடப்ப கவுண்டர் அவர்கள் தலைமையில் பிராமணரல்லாதார் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் அதிகமாயிருந்தபடியால், நாற்காலி, பெஞ்சு இவைகளில் இடமில்லாமல் பலர் தரையிலும் சிலர் வெளியிலும் இருக்கவேண்டியதாயிற்று. முதலாவதாக, திருவாளர் க.வா. வெங்கிடாசலம பிள்ளை பேசியதாவது:— சகோதரர்களே! பல நூற்றாண்டுகளாக பிராமணரும், பிராமணரல்லாதாரும் சுகதுக்கம் ஒன்றென்றும் பிராமணரல்லாதார்களை பிராமணர்கள் சகோதரர்களாகப்பாவித்து சமத்துவமாய் நடத்துவார்களென்றும் நம்பியேயிருந்தோம். பிராமணர்கள் சுயநலமும் சுயஜாதி அபிமானமுங்கொண்டு தங்கள் முன்னேற்றமே கண்ணுங் கருத்துமாயிருந்து நம்மை அடிமைத்தனத்தில் அழுத்தி வந்தபடியால் இதை அறிந்த தீர்க்கதரிசிகளாகிய நமது பூஜ்ஜியர்கள் ஜஸ்டிஸ் இயக்கம் கண்டு பிடித்து நமது முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வந்ததால் இந்த பகுது வருஷகாலத்தில் எவ்வளவோ நமதுமுன்னேற்றமும் ஏற்பட்டிருக்கிறதென்றும், அதுபோலவே, பிராமணர்களும். முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் தனிச் சங்கங்கள் கண்டு முன்னேற்றமடைந்து வருகிறார்களென்றும், ஆனால் அந்தச்சங்கங்களைப் பற்றி யாருக்கும் யாதொரிச்சல் இல்லையென்றும், பிராமணரல்லாதார் சங்கத்திற்கு மட்டும் பிராமணர்களும், பிராமண பத்திரிகைகளும் எதிரிகளாயிருக்கிறார்களென்றும், அதற்கு காரணம் தாங்கள் மாமன் காணியாய் அனுபவித்து வந்த உத்தியோகமும், உரிமையும், நமக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டுமேயென்ற எண்ணமும் சுயநல புத்தியுமேயென்றும், பல நாட்களுக்குமுன்னமே இப்போ ப்பட்ட சங்கம் நாம் நிறுவியிருக்கவேண்டுமென்றும், ஆனால், நமக்குத் தலைவர்களென்று வந்த பிராமணர்களும் அவர்கள் சூழ்ச்சியிலீடுபட்டு வந்த பிராமணரல்லாதாரும் அவர்களுடைய பத்திரிகைகளும் நம்மை தாழ்மதிப்படுத்தியதோடு தாழ்மையும் படுத்தி விட்டதென்றும் "கழுதைக்குட்டி இறந்தபட கன்னாதா மண்டாயோ?" என்றபடி நாமெல்லாம் தர விசாரியாமல் அழுத கதைபோல், பார்ப்பனர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளே வேதமாகக் கருதி, நமது இயக்கப் பத்திரிகைகளைப் புறக்கணித்து விட்டு வந்தபடியால் வெகுதூரம் ஏமாற்றமடைந்து விட்டோமென்றும், நமது பத்திரிகைகளை படிக்க ஆரம்பித்த உண்மையை தெரிந்து விட்டார்களென்றும், திருப்பூரில மட்டும் கடந்த ஒரு மாதத்திற்குள் 15-புதிய பத்திரிகைகள் தருவிக்கப்படுகிறதென்றும் அடுத்த மாதத்திற்குள் "குடி அரசு" "திராவிடன்" "ஜஸ்டிஸ்" தாழ்ம பத்திரிகைகள் வருமென்றும், ததுந்த பரியமனிதர்களே பத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச்சேர்த்துவருவது எனக்குத்தெரியுமென்றும் இப்போது தான் நமது ஜனங்கள் சுயநலப் பத்திரிகைகளின் சூழ்ச்சியைத்தெரிந்து அவைகளைப் பகிஷ்கரித்து வருகிறார்களென்றும், ஆகையால் நமது முதல் வேலை கிராமங்கள் தோறும் நமது பத்திரிகைகளைப் பரவச்செய்வதே யென்றும், அதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் பிரயாசை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் பேசி முடித்தார். (பெருத்த கரகோஷம்)

அடுத்தாப்போல் திரு. மா. வெ. கருப்பண்ண செட்டியார், பேசியதாவது:—நாங்கள் எல்லோரும் காங்கிரசில் சேர்ந்து முக்கியமாய் உழைத்தவர்தோமென்றும், ஜஸ்டிஸ் கட்சி கத்தர், தீண்டாமை, மதவிலக்கு, முதலிய காந்தியடிகளின் திட்டங்களை ஒப்புக்கொண்டுவிட்டதாலும் பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற் நமதுஜஸ்டிஸ் கட்சிதான் உண்மையாய்ப்பாடுபடுவதென்று என் மனச்சாக்ஷி சொல்லுவதாலும் தற்காலத்திய காங்கிரசு ஒரு சார்பாகத் திரும்பிவிட்டதென்றும் நினைத்தே இங்கே நமது சங்கம் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்ற ஆவலால் வெளியூர்களிலிருந்து நமது கட்சித் தலைவர்களைத் தருவித்து திறப்புவிழா கடத்த யோசித்திருந்தோமென்றும், ஆகிலும் தலைவர்கள் எல்லாம் சுற்றுப்பிரயாணத்திலிருப்பதாலும் நமது ஜஸ்டிஸ் திருநாளை முன்னிட்டு இன்றே சங்கத்தை ஏற்படுத்திவிட்டோமென்றும், நீங்கள் ஒவ்வொருவரும் சங்கத்திற்கு அங்கத்தினர்களைச் சேர்க்கவும் நமது பத்திரிகைகளைப் பரவச் செய்யவும் தீவிரமாய்உழைக்கவேண்டுமென்றும் கூடிய சீக்கிரம் நமது பெருந் தலைவர்களை இங்கு தருவிக்க ஏற்பாடு செய்கிறோமென்றும் பேசி முடித்தார். (கரகோஷம்)

அதற்காப்போல் திரு சி. பி. முத்துசாமி செட்டியார் பேசியதாவது:—நான் பழைய ஜஸ்டிஸ் கட்சிக்காரனென்றும் நீங்கள எல்லோரும் அதிக ஊக்கத்துடன் இன்று சங்கம ஏற்படுத்தியதிற்கு பெரு மகிழ்ச்சி அடைகிறேனென்றும், இச்சங்கத்திற்கு என்னால் செய்யக்கூடிய தொண்டைக் குறைவின்றி செய்துவருவதாயும் கூறினார். (காகோஷம)

பின்னர் பேசிய திரு. டி. துரைசாமி செட்டியார் கூறியதாவது:— நண்பர்களே! நான் வெகுநாளாக முன்னமே ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தவனென்றும், எனக்கு ஊழியம செய்ய இச்சங்கத்தால் சந்தர்ப்பம் ஏற்பட்டதைபற்றி அதிக சந்தோஷப்படுவதாயும பேசி முடித்தார் பின்னர் இச்சங்கதிற்கு நிலாக அங்கதினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: திருவாளர் கா வா. வெங்கிடாசலம பிள்ளை, காரியதரிசி: திருவாளர் மா வெ. கருப்பண்ண செட்டியார், பொக்கிஷதார்: திருவாளர் சி. பி. முத்துசாமி செட்டியார்.

நிலாக அங்கதினர்கள்:— திருவாளர்கள், டி. பி. ஷேகமெய்தீன் சாயபு, எ. எஸ். கோத்தினா முதலியார், எ. துரைசாமி செட்டியார், தா. க. சண்முகவேல் பிள்ளை, டி. எஸ். முருகநாத செட்டியார், ஞான முத்து செட்டியார், எம்.எஸ். ஜேகப்பிள்ளை டி. எஸ். திருஞான சம்பந்த செட்டியார், குரு. ராமலிங்கம் செட்டியார், எம். கே. முருகநாத செட்டியார், திருவேங்கிடாச்சாரியார், அ. முருகேச முதலியார்.

அக்கிராசனர் முடிப்புரையாகப் பேசியதாவது:—நண்பர்களே! நான் ஒத்துழையாக் காங்கிரசில் சேர்ந்தவனென்றும், ஜஸ்டிஸ் கட்சியைக்கண்டு நான் பயப்பட்டு இருந்தேதனென்றும், இப்போது "திராவிடன்," "குடி அரசு" பத்திரிகைகளை படித்துப் பார்த்த பிறகே எனக்குள்ளிருந்த தவறும் நீங்கியதென்றும், இன்னும் இரண்டொரு சந்தேகங்களைத் தலைவர்களைக் கொண்டு தெரிந்தபின் இக்கட்சியில் முக்கிய அங்கத்தினராகச் சேர்ந்து உழைப்பதாக வாக்களிப்பதாயும் அதற்கு சாட்சியமாகவே இந்தப் புண்ணியதினத்தில் இந்தச் சபைக்கு வந்து இன்று "திராவிடன்" பத்திரிகைக்கு சந்தாதாரனாகச் சேர்ந்ததாயும் சொல்லிமுடித்தார்.

கூட்டத்திலேயே ஆஜராகியிருந்த பிரபல தலைவர்கள் 'ஜஸ்டிஸ்,' 'திராவிடன்,' 'குடி அரசு' பத்திரிகைகளுக்கு 9 சந்தாதாரர்கள் புதிதாய்ச் சேர்ந்தார்கள். சபைத்தலைவருக்கும் வந்திருந்தவர்களுக்கும் திருஞான முத்து செட்டியாரால் வந்தனங்கூறப்பட்டு இரவு 8 மணிக்கு சபை இனிது கலைந்தது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

பட்டுக்கோட்டை ஐக்கிய நாணயசங்கம்:— 20-2-27 தேதியில் இவ்வூர் ஐக்கிய நாணயசங்க மகாசபை கூட்டமொன்று மாலை 4-மணிக்கு மேல் சங்ககட்டடத்தில் தலைவர் ஸ்ரீமான் வேணுகோபால் நாயுடுகாரு B. A. B. L. அவர்கள் தலைமையில் கூடியது. சுமார் 300 அங்கத்தினர்வரை விஜயம் செய்திருந்தனர்.

இச்சங்கத்திற்கு வழக்கம் போல் புதியநிர்வாக அங்கத்தினர் ஏழுபேர்கள் தேர்ந்தெடுக்கும் விஷயம் வந்தவுடன் இவ்வூர் பிராமணர் சங்கள் எற்கனவே இரகசியமாய் தங்களுக்குள்ளே செய்து கொண்ட ஏற்பாட்டின்படி ஆவேழுஸ்தானங்களையும் கைப்பற்ற வேண்டுமென்று பகீரதப்பிரயத்தனம் செய்தும் இறுதியில் ஆறு பிராமணரல்லாத அங்கத்தினர்களும் ஓர் பிராமணருமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இதில் ஓர் விசேஷமென்னவென்றால் இவ்வூர் தற்காலகாங்கிரஸ் தலைவரும், இவ்வைக்கிய நாணயசங்கம் இவ்வூரில் ஏற்பட்டது முதல் 8 வருஷகாலமாக இதில் தொடர்ந்து நிர்வாக அங்கத்தினராக இருந்துவந்தவரும், பிராமணருடன் காங்கிரஸ் என்னும் பெயரால் ஒத்துழைத்து மீண்டும் அந்த ஸ்தானத்தை அடையலாமென்று கனவு கண்டு கொண்டிருந்தவருவான ஸ்ரீமான் பி. ராஜகோபால நாயக்கரவர்களுக்கு ஒரு பிராமணன் கூட வோட் செய்யாமல் போனதுமன்றி, பாவம் தன்பழையஸ்தானத்தையுமிழக்க நேரிட்டது.

ஆகையால், இனியாகிலும் பிராமணர்களுடன் சேர்ந்துகொண்டு காங்கிரஸ் என்னும் பெயரால் சாதீவீதத்தையும் விட்டு பிராமணரல்லாதாரையும் அவர்கள் கட்சியையும் நிட்டுவதைவிட்டு, பிராமணரல்லாதாருடன் சேர்ந்து ஒத்துழைப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது என்றுதேசீய பார்ப்பனரல்லாத சங்க அங்கத்தினர்எழுதுகிறார்.

நாமும் நாகரிகமடைந்தவர்களா?

ஆம் என்றால்

பெண்கள் பக்குவ வயதிற்குக்கூட நமக்குள் சண்டை ஏன்?

(கைவல்லியசாமியார் எழுதுவது)

அநேக காலத்திற்கு முன்னே எல்லா ஜாதியாரையும்விட நாமே நாகரீகமடைந்தவர்கள் என்று பிரசங்க மேடைகளிலும், பத்திரிகைகளிலும் சொல்லுவதும், எழுதுவதும் சகஜமாக இருக்கிறது. நம்மைவிடக் காட்டு மிராண்டிகள் எந்த உலகத்திலுமில்லை என்று அன்னிய தேசத்தார் நினைக்க இந்தியா சட்ட சபையில், சமத வயது என்னும் மசோதா வந்துவந்து நம் சட்ட மெம்பர்களையும் சமூகங்களையும், அன்னியர் மனதில் கேவலமாக நினைக்கச் செய்கிறது. பெண்ஜாதியைப் புருடன் கூடுவதற்கு பெண்களின் வயதை 14-ஆகச் செய்யவேண்டுமென்று டாக்டர் ஸர். ஹரிசிங் கௌர் இந்தியா சட்டசபையில் ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார். 1893-ம் வருஷத்திற்கு முன் சம்மத வயது 10-ஆக இருந்தது. அதை 12-ஆகச் செய்ய இந்தியா கவர்ன்மெண்டார் அந்த வருடமே ஒரு மசோதாவைத் தயார் செய்தனர். சட்டத்தின்மூலம் நமது சமூக வாழ்வை உண்டுபண்ண அவர்கள் விரும்பிய திருத்தம் சிலாக்கியமானதென்று சொல்லியும், "ஜனங்களுடைய சமூக வாழ்வில் அன்னிய மதத்தினர்களாகிய கவர்ன்மெண்டார் குறுக்கிடக்கூடாது" என்ற நிச்சயத்தின்மேல் அதை எதிர்த்தார்கள். எதிர்த்தும் அந்த மசோதா அப்பொழுது சட்டமாகிவிட்டது. அந்த சட்டத்தின்படி இப்பொழுது சம்மத வயது 12-ஆக இருப்பதை 14-ஆகச் செய்யவேண்டுமென்று சில வருடங்களுக்குமுன் பக்ஷி மோகன்லால் என்பவர் ஒரு மசோதாவை இந்தியா சட்ட சபையில் ஆஜர் செய்தார். அது நிறைவேறவில்லை. 1924-ம் வருடத்தில் டாக்டர் ஸர். ஹரிசிங்கௌர் அதே மசோதாவை இந்தியா சட்டசபையில் ஆஜர் செய்தார். அதுவும் நிறைவேறவில்லை. மறுபடியும் இந்த சபையில் அந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார். வெள்ளைக்கார அரசாட்சிக்குமுன் ஒரு வயதிலிருந்து பத்து வயது வரை சம்மத வயதாக இருந்தது. ஒரே தடவையாக உயர்த்திவிடுவதா அல்லது படிப்படியாகவா என்பதை நாம் விவகரித்தால் நம்மை நாமே பரிகாசம்செய்து கொண்டவர்களாவோம். விவாக-மானவுடன் காலாம்நாள்பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஒரு படுக்கையில் படுக்கவைத்தால்தான் கலியாணச் சடங்கு பூரணப்படுவது நம் வழக்கமாக இருக்கிறது. ருதுவாகாததற்குமுன் கலியாணமாக வேண்டும். கலியாணமானவுடன் புருடன் பெண்ஜாதி படுக்கைக்குப்போகவும் வேண்டும். இப்போப்பட்ட இடங்கேடான கொள்கை நமது சமூகத்தை சீரழிக்க நாமும் நாகரிக முதிர்ந்தவர்களென்று சொல்லுவதில் வெட்கப்பட வேண்டாமா? குழந்தைகளைப் பெண்ஜாதியாக்கிக்கொள்வதைவிட பெண்களை பெண்ஜாதியாக்கிக்கொள்ளுங்கள் என்பதில் நமக்குத் தர்க்கமென்ன? நம் சமூகத்தில் இந்த கொடிய வழக்கமிருப்பதினாலன்றோ இந்த அக்கிரமத்தை நீக்க அநேக நாளாக அன்னியர் பிரயத்தனப்படுகிறார்கள்? இதுவரையிலும் நம் சமூகத்தில் யாதொரு ஏற்பாடும் செய்யாமல் இனியும் அந்த ஆபாசமே நடந்துவருவதினாலன்றோ இப்பொழுதும் அன்னியர் பிரவேசித்திருக்கிறார்கள். காலாகாலத்தில் ஆணும்பெண்ணும் முக்கியவயதடைந்து பக்குவப்பட்டு கூடுங்கள் என்று மசோதா வருவதும் அதை ஒத்துக்கொள்ளமாட்டோம்; என்றால் "இரண்டு பல்லுக் காளைகளை உழுதால் நொந்துபோகும்" "மூத்த மரத்து விதை பூத்துக்காய்க்கு"மென்று நாட்டுக்காரர் சொல்லும் புத்திகூட சட்டசபை மெம்பர்களுக்கில்லாமல், வந்த மசோதாவை எதிர்க்கும் நம் சட்ட சபையை உலகமெலாம் ஏளனஞ் செய்யாதா? நாம் எவ்வளவு சமூக சம்பந்தமான நியாயங்களும், சாஸ்திரங்களும், யுக்தங்களும் கோவையாக எடுத்துச் சொன்னாலும், அறியாக் குழந்தைகளை பெண்ஜாதியாக்கிக்கொள்ளுவது தானே அதிலுள்ள காரியம். படித்தோம், தர்க்கம் பண்ணத் தெரிந்தோம்; சத்தியமும், நியாயமும, நிச்சய புத்தியும மறந்துவிட்டோமே, நாகரிக முடைய தேசத்தார் நம்மை ஏளனமாக நினைப்பார்களே என்கிற கூச்சம் நம்மிடத்தில்லையே; எதற்கும் நியாயம் சொல்லுகிறோம். விஷயத்திற்கு நியாயம் பொருத்துகிறதா என்பதில் நம் புத்தி செல்லுவதில்லை. குற்றத்தை உணரும் குணமே நம்மை விட்டுப்போய்விட்டது. ம் தேசம் உஷ்ண தேசமானதாலும் பால்ய விவாகத்தாலும் ஒன்பது வயது முதற்கொண்டே பிரஷ்டையாகிறார்கள். "பிரவடையான மூப்பதாம் நாள் ருது சாந்தி செய்துகொள்ளலாம்" என்று ஸ்மிருதி விதித்திருப்பதாக சாஸ்திரங்கள் சொல்லுகிறார்கள். சிறு பெண்களுக்குப் பெரும்புடவை கட்டி அலங்கரித்து ஓமம் வளர்த்து பலி பீடத்திற்கு மிருகங்களைத் தள்ளுவதுபோல் பெண்களை வீட்டிற்குள் தள்ளுகிறார்கள். தேகத் தண்பமும் மனே திருப்தியில்லாமையும், நாணம், மடம் அச்சத்தால் மறைத்தாலும் வயிற்றுவலி சூதகம் அதிகப்படல் குறைதல், தெர்ப்ப அழிவு. அகாலப் பிரசவம், ஜ்வரம், க்ஷயம், விஷங்களில் ஆசையில்லாமை, முதலியவைகளை பின்னால் மறைக்க முடிவதில்லை.

வெளித்தோற்றத்தில் தேகம் வளர்வது எப்படி முக்கிய தர்மமாக இருக்கிறதோ அப்படியே தேக தத்துவத்திலும் தேக முதிர்வடைவது முக்கிய தர்மமாகும். வளர்ச்சி என்பது வண்ணத்தில் பெருகுந் தன்மை. முதிர்வு என்பது குணத்தில் உறுதிகொள்ளுந்தன்மை. பெண்களுடைய தசைகளும் இந்திரியங்களும் உறுப்புகளும் வண்ணத்தில் பெரிதாவதல்லாமல் அவைகளெல்லாம் முதிர்ந்தவையாயுமிருந்து தத்தமக்குள்ள தொழில் புரியுஞ் சக்தி அதிகரித்து தன்மையில் சிறப்புற்றவையாயிருக்கவேண்டும். அப்பொழுதுதான் பெண்கள் சம்போகத்திற்குத் தகுந்தவர்களாகிறார்கள். அக்காலத்தில் வயது 16-க்கு மேற்படவேண்டும். பாலிய விவாகஞ் செய்கிறவர்களின் சாந்தி முகூர்த்தமெல்லாம் வெளிகே சில அசந்தர்ப்பங்களை உத்தேசித்தும், மாப்பிள்ளை கெட்ட வழியில் பழகிவிடுவானே என்னும் பயமும் சடங்கு வேடிக்கை ஜலுதியில் நம் வீட்டில் நடக்கவேண்டுமென்கிற பெண்கள் ஆத்திரமுமே ஒழிய குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், முதலிய பொருத்தப் பிரகாரம் நாயகன் நாயகிகள் குறிப்பறிந்தும் புணர்ச்சி மகிழ்ந்தும் நடக்கும் ருதுசாந்தி முகூர்தம் நடப்பது அரிது. இதனால் ரூபங்குறைந்தும் பலமில்லாமலும் பயமே குடிகொண்டும் குழந்தைகள் பிறக்கின்றன. அநேக இங்லீஷ் மருந்துகளும் டாக்டர்களும் ஏராளமாய்ப் பணத்தைத் தின்றாலும் அநேக குழந்தைகள் பிழைப்பதேயில்லை. தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியாகும ஒவ்வொரு சிசுவினது அம்சங்களும் அத்தாயின் அவயவங்களிலிருந்து போகும் சாரத்தினால் உண்டாக்கப்படுகின்றன. இந்த சாரத்தை தாயின் கொடியின் மூலமாய் செல்லும் இரத்தமானது சிசுவின் அம்சங்களுக்கு கொண்டுபோய் சேர்க்கிறது. இந்த வஸ்துவானது தாயினது அவயவங்களின் மூலமாய்ச் செல்லும் பொழுது அத்தாயினது மனதிலும் சரீரத்திலும் உண்டாகும் மாறுதல்களைப் பெற்றுக்கொண்டு செல்லுகின்றது. மனிதனுக்குண்டாகும் நாலுவித குணங்களும் தாயின் கர்ப்பத்தில் சிசுக்களாயிருக்கும் போதே உண்டாகிவிடுகின்றன. சுருங்கச்சொன்னால் சிசுவினது உற்பத்திகாலமுதல் அதன் உறுப்புகளெல்லாம் உண்டாகிச் சாயை விட்டு நீக்கி இருக்கும் காலம் வரும் வரையில் அச்சிசுவிற்கு வேண்டிய சகல வஸ்துக்களையும் கொண்டுவந்து சேர்ப்பது தாயின் உதிரம். இப்படியிருக்கையில் தேகம் பூரண வளர்ச்சியடையாமலும் மக்களைக்குணத்தால் மனம் புத்தி மாறுபடாமலிருக்கும் சிறு பெண்கள் வயிற்றில் உற்பத்தியாகும் வீரபுருடர்கள் சயாசாச்சியமாகுவார்களா? அல்லது தாங்களும்அடிமைகளாகி தங்களைச்சேர்ந்தவர்களையும் அடிமைப்படுத்துவார்களா? இந்த குழந்தைகளுக்குத் தாய்ப் பால் தானுண்டா? இல்லை. தேகத்தில் பல கருவிகளும், தசைகளும், வளர்ந்து, முதிர்ந்து சம்பூரண ஸ்திதியை யடையவேண்டும். அதில் பெண்கள் மார்பு வளர்வதில் சாதாரணமாய் தேகத்திற்குத் தக்கபடி எவ்வளவு வடிவை அடையவேண்டுமோ அவ்வடிவை அடைவதற்கு முன் சம்போகமாரம்பிப்பதால் அதன் ஒவ்வொரு பாகமும் வடிவிலும் கட்டுப்பாட்டிலும் வேண்டிய பல மடைவதில்லை. அதனால் அவை சிறுத்து பாலுண்டாகும் கருவிகள் கெட்டு சும்பிப்போகின்றன. ஆகவேமேலுட்டுகட்டிபால்கஞ்சிவகைக்கு நமவீடுகன் மார்க்கட்டாயிருக்கின்றன. அதை விற்க நம் டாக்டர்கள் தாராயிருக்கிறார்கள், மடியில்லாத மாடு எருமைகளுக்குப்பால்காணுது என்பதுஎல்லாருக்கும் தெரியும்.

நமது சமூக வாழ்க்கையில் இத்தகைய காட்டுமிராண்டித்தனமும், கொடுமையும் இருப்பதை உத்தேசித்தே அன்னியர்கள் மசோதா கொண்டுவந்திருக்கிறார்கள். நம் சமூகத்தின் வாழ்வில் ராஜாங்க அதிகாரத்தைப் புகுத்தவும், அன்னியமதஸ்தருக்கு நம் ஜன சீர் திருத்தத்தில் தலையிடும் ஞாயமில்லை என்று நம் சட்டசபை மெம்பர்கள் எதிர்த்தார்கள் இனியும் எதிர்ப்பார்கள். இவைதர்க்கத்திற்கு அழகுதான், காரியத்தில் எப்படியிருக்கிறோம் நாம்சியாயிருந்தால் அன்னியர் புகவதுவேயில்லை. நம்மை நாமே சீர்திருத்திக்கொள்வோம் என்னும், பெருமை அடைய நமக்கு யோக்கியதையில்லை, யோக்கியதை இருந்தால் நம் சமூகத்தை அழித்துக்கொண்டுவரும் இந்த வழக்கம் இனியும் சீர்திருத்தம் அடையாமலிருக்குமா? நமது சமூகம் இதில் கொண்டுள்ள அக்கரையை கவனிப்போம். சட்டமெம்பர்கள் மசோதாவைத் தடுத்துவிட்டார்களே ஒழிய ஜன சமூகத்தில் இதற்காக அவர்கள் பாடுபட்டதோரம் எவ்வளவு? வக்கீல்களும், டாக்டர்களும் ஜன சமூகத்தில் படித்து விஷயம் தெரிந்தவர்களாகக் கருதப்படுகிறவர்கள். மற்றவர்களைவிட இவர்களுக்கே இதில் அதிகம் தெரிய வந்து விருக்கிறது. வக்கீல் பெண் 21-வயதிற்கு மேற்பட்டால்தான் மேஜர் ஆகிறாள் என்று படித்துமிருக்கிறார். அதே கேசுகளும் நடத்தியிருப்பார்; அப்படியிருந்தும் அவர் அவசர நிமித்தம்12வயது பெண்ணை ருது சாந்தி செய்து கொள்ளுகிறார். டாக்டர்களோ ஐந்து வருடம் தேக தத்துவ சாஸ்திரம் படித்து ஒவ்வொரு அங்கமாக அறுத்துப் பார்த்து பாஸ் பண்ணினவர்கள் இன்னின்ன அங்கம் இவ்வளவு இவ்வளவு வயதில் பூரணப்படுகிறதென்றுகோர்ட்டில் சாட்சியும்சொல்லியிருப்பார்கள். ஆனால் அவர்கள் சமயத்தை உத்தேசித்து 13 வயதுப் பெண்களை சாந்தி முகூர்த்தம் செய்து கொள்ளுகிறார்கள். பின் உத்தியோகஸ்தர்கள், ஜட்ஜிகள், கலெக்டர்கள் கோர்ட்டில் "இந்தப்பெண் மைனர் தாய் வீட்டிலிருக்கவேண்டும்" "அந்தப் பெண் மேஜர் புருஷன் வீடுபோகவேண்டும்" என்ற நியாயம் தவறாமல் தீர்ப்பு செய்

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.)

நமது கோர்ட்டுகள்.

கோர்ட்டு எனபது சூதாடுமிடம்.

நமது வகுப்பார் சிர் குலந்த ஞானங் கெட்டுப் பார்ப்பனாகளின் அடிமைகளாகி அவர்களின் வாலைப்பிடித்துக்கொண்டு திரி வதற்கு முக்கியகாரணம் நம்நாட்டில் ஏற் பட்டிருக்கும் கோர்ட்டுகள் என்று சொல்ல லாம்படும் சூதாடுமிடங்களும், அவைகளுக்கு ஜட்ஜுகள்என்றுமதிக்கப்படும் சூதாட்ட நிர்வாகிகளுமே ஆவார்கள்.

சீட்டு மேஜை.

அதாவது ஒருவர் ஒருவீட்டை சூதாட்டத் தில் தவாடகைக்கு கொடுத்திருக்கலாம் அவ் வீட்டில் சூதாடிகளோ ஒன்று சேர்த்து அவ்வா ட்டத்திற்கு அது தகுமான சமாங்களையும் ஆடவசதியையும் செய்து கொடுத்து சீட்டு மேஜைக்காக என்னும் கூலி வாங்குகிறவன் ஒருவனுண்டு. சூது ஆடவருகிறவர்கள் ஒவ் வொரு வெற்றுக்கும் இவ்வளவு என்று கொடுத்து வருவதுண்டு. சாதாரணமாக காலை முதல் மதியகாலம்வரையில் ஆளுக்கு இவ்வளவு என்பதாக கையில் பணம் வைத துக்கொண்டு சூதாட ஆரம்பித்தகால்கடைசி யாய் எழுந்து போகும்போது நாலுபேர் தோல்வி அடைந்து கடன்காரராய் எழுந்து போவதும் இருவர் சம்பாதித்தவர்களாக வும் இருவர் அசலோடுபோவதாகவும் காண ப்படும். சம்பாதித்தவர் என்பவர்களுக்கு அவர்கள் அசலும் மேல்கொண்டு கால் ரூபாயோ அரை ரூபாயோல்பமிருப்பதாகத் தெரியும். அதுவும் தோற்றவர்கள் மேல் கடன் வீட்டிருக்கும் தொகையாயிருக்கும். ஆனால் தோற்றபணமும் கடன்காராக்கிய பணமும் எங்கு போய்விட்டதென்று பார்ப் போமேயானால் வீட்டு வாடகைக்காரனுக கும் சிட்டாட வசதி செய்து கொடுத்த சிட்டு மேஜைக்காரனுக்கும், அந்த இடம் தெரிந்து அதகு வந்து மிரட்டிய போலீசுக் காரனுக்கும் தான்போயிருக்குமே ஒழிய ஆடினவர்களுக்கு லாபமிருக்காது. இப்ப டியே தினப்படி வந்து சூதாடுவதும் தினப் படி பலர் தோல்வியடைவதுமாயிருக்குமே ஒழிய ஜயித்தவர்களுக்கு தோற்றவர்கள் பணம் அவ்வளவும் வந்திருக்காது. அதுபோ லவே கோர்ட்டு நீதி என்பது இடம் கொடுத் தவர்களுக்கு சமானமாகிய ஆசாங்கத்திற் கும் ஆடவசதி செய்து கொடுத்து சிட்டு மேஜைவைத்தவர்களுக்குச் சமானமா கிய வக்கீலுக்கும் பிரட்டி காசுவாங்கும் போலீசு காரனுக்குசமானமாகியகோர்ட்டு இப்பந்தக ஸ்தருக்கும் ஜனங்களுக்கும் போய்ச்சேர்ந்துவிடு கிறதில் உண்மையான வியாக்கியா னத்துக்கு ஒன்றும் மீதியாவதில்லை.

தோற்றவும் கேடி ஜயித்தாலும்கேடி

வியாசத்திற்கு வரும் வாதி தோற்றால் அனேகமாய் பாப்பாரய்விடுகிறான். ஜயித் தால் செலவு செய்ததொகையை அடைந்தவ னாகிறான். அதிலுமேவேபரிவாதியும்ஜயித் தாலும் தோற்றாலும் அனியாயமாய் கெட்டுப் போகிறான். இதன் காரணம் என்னவென்று பார்ப்போமேயானால் பிரிட் டிஷ் கோர்ட்டுகள் என்று சொல்வது பல ருக்கு உத்தியோகம் கிடைக்கவும் வக்கீல்கள் பிழைக்கவும் வசதிக்காக ஏற்பாடு செய்யப் பட்டனவே அன்றி குடிமக்கள் நீதி அடைய அல்லவே அல்லவென்பதுதான்.

நியாயம் கிடைக்கும் தன்மை

வக்கீல்களின் புரட்டுகளாலும், தந்திரங் களாலும்வக்காலத்துக்கு கையில்பணமி ருக்கிறவரை "நியாயம்" கிடைக்கும்மாதி ரி வசதிசெய்யப்பட்டிருக்கிறது. சிற்சில சமயங் களில்சிலவிவகாரக்காரனுக்குகைப்பணம்தீர் ந்துபோன பிறகு கூடகடன் கிடைப்பதாயி ருந்தால்மறுபடியும்கூட "நியாயம்" கிடைக்க வழியிருக்கிறது. பெரிய விவகாரங்களில் நியாயம் என்பது சட்டத்துதப் பொருத்த தாகவே இல்லை. மாதிரி கேசுகளில் இதற்கு முன் உள்ள ஜட்ஜிகள் என்ன அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார் இன்ன ஹை ஜட்ஜி எப் படி தீர்ப்பு சொல்லி இருக்கிறார் என்று பழைய ஜட்ஜிகளின அபிப்பிராயமே சட்ட மாயிருக்கிறது. சில கேசுகளில் அந்தந்த ஜட்ஜி கொள்ளும் அபிப்பிராயமே சட்ட மாகும். நீ நிஸ்தலங்கள் என்பது வரிசைக் கிரமமாய் முன்சீப் கோர்ட், ஜில்லா ஜட்ஜி அல்லது சப் ஜட்ஜி அபீல், ஹைக்கோர்ட் அபீல், புல்பெஞ்சு அபீல், லட்டர்ஸ் பேட்டெண்ட் அபீல், ரிவிஷன் பிரிவிகவுன் சில்என படிப்படியாய் பலஸ்தானங்கள் வி வகாரக்காரன அறிவீனத்திற்கும் ஆணவத் திற்கும் பணத்திமிருக்கும்தக்கபடி அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவுக்கும் தூண்டுகோலென வக்கீல் கூட்டங்களும் இவர்களை நத்திப் பிழைக்கும் இவர்களது புரோக்கர்களும் மலிந்து வருகின்றன. இவ் வித நியாய ஸ்தல முறையும் நியாய வாதி முறையும் நியாயங்கிடைக்குமுறையும் நீங் காமல்மக்கள்சுயாஜ்ஜிய மடைந்துவிடலாம் என்பது சமுத்திர நீரை எல்லாம குடித்து விடலாம் என்பது போலவே ஆகும்.

கோர்ட்டு ஏற்படுத்தினதின் கருத்து.

பொதுவாய் நோக்குமிடத்து இம்முறை கள் நாட்டின் விடுதலைக்கு விரோதமாகவும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமாகவும் சர்க்காரும் பார்ப்பனரும் கூடிச்செய்த சூழ்ச்சியே அல்லாமல் வேறல்ல.

தற்கால தேசாபிமானம்.

தற்கால "தேசாபிமானி" என்பவருக்கும் "பொதுநலசேவை செய்பவர்" என்பாருக் கும் இம்மாதிரி கோர்ட்டுகளையும் நியாயம் கிடைக்குமுறைகளையும் இன்னும் அதிகமாக உற்பத்திபண்ணுவதே யோக்கியதாம்சமா யிருக்கிறது. சமீபத்தில் சட்டசபைக்கு கிளர்க கனவான்களில் ஒருவர் தன்னுடைய யோக்கியதாம்சத்தை வெளிப்படுத்திய ஒரு அறிக்கையில் நான் இன்ன ஊருக்கு கோர் ட்டுகள் வைக்கும்படி செய்தேன் இன்ன ஊரில் எடுபட்டுவிட இருந்த கோர்ட்டை கிலி கிறுத்தினேன் ஆதலால் எனக்கு ஓட்டுச் செய்யுங்கள் என்று வெளியிட்டிருந்தார். இதுபோலவே ஒரு ஓட்டர் ஒரு சட்டசபை அபேக்ஷகருடைய யோக்கியதையைப்பரி சீலிக்கையில் அவ்வபேக்ஷகரைப்பார்த்து "நீர், இந்த ஊரில் ஏற்பட இருந்த சப் கோர்ட்டைவேண்டாமென்று சொன்னீராய தால் உமக்கு தேசபக்தி இல்லை நீர் பொது நலசேவைக்காரராகமாட்டீர் உமக்கு ஓட்டு செய்யமுடியாது" என்று சொன்னே ாம். அதற்கு அந்த அபேக்ஷகர் நீர்தப்பாய் நினைத்துக்கொண்டீர்; நான் இந்த ஊருக்கு ஒரு ஜில்லா கோர்ட்டே வரவேண்டுமென் கிற ஆசையினால் சப்கோர்ட் வேண்டா மென்று சென்னேன் இந்த ஊர் நிலைமைக்கு இங்கொரு ஜில்லா கோர்ட்டு வேண்டாமா? அனேக ஜில்லாக்களில் இரண்டு ஜில்லா கோர்ட்டு இருப்பது போல் இந்த ஜில்லா வுக்கும் இரண்டு ஜில்லா கோர்ட்டு வேண் டும் அதற்கு இந்த ஊர்தான் தகுதி என்று சென்னோம். இதிலிருந்து இம்மாதிரி ஓட் டர்களுக்கும் அபேக்ஷகர்களுக்கும் எவ்வ ளவு தேசபக்தியும் பொது நல சேவையும் இருக்கிறது என்று யோசித்து பார்த்தால் தெரியும்.

சட்டமெம்பரின் தேசபக்தி.

அரசாங்கத்தாரின் மற்றபடி சட்டசம்பந் தமான இலாகா சட்டமெம்பரின் வேலை தான் என்ன? இவ்வருஷம் சட்டகலாசாலை யில் (லாகாலேஜில்) படித்துத்தேறியபிள்ளை கள் தொகைஎவ்வளவு? இறந்துபோனவக்கீல் கள் தொகை எவ்வளவு? அதுகளுக்கு பதில் செய்து சரிகட்டின பிள்ளைகள் போகமீதி தொகை எவ்வளவு? இவர்கள் பிழைப்புக்கு புதிதாய் உற்பத்தி பண்ணின உத்தியோகமெம்வ்வளவு? போக பாக்கியுள்ள பிள்ளைகளின் வயிற்றுப் பிழைப்புக்கு எந் தெந்த ஊரில் நிரந்தர முன்சீப்கோர்ட்டு களை ஏற்படுத்தலாம், எந்தெந்த ஊரில் நிரந் தர சப்கோர்ட்டுகளை ஏற்படுத்தலாம், எந் தெந்த ஊரில் நிரந்தர ஜில்லா கோர்ட்டுகளை ஏற்படுத்தலாம், எந்தெந்தஊரில் தற்காலசார் தியாகமுன்சீப்கோர்ட்டுகளை ஏற்படுத்தலாம், எந்தெந்த ஊரில் தற்கால சப்ஜட்ஜி கோர்ட் டுகளை ஏற்படுத்தலாம், எந்தெந்த ஜில்லா வுக்கு உதவி சப் ஜட்ஜிகளையோ குறிப் பிட்ட காரியங்களுக்கு என்கிற ஜட்ஜிகளை களையோ நியமிக்கலாம் என்கிற கவலையே தவிற வேறென்ன இருக்கிறது?

சட்ட மெம்பரும் வக்கீல் பேட்டியும்.

சட்ட மெம்பரை வக்கீல்கள் கூட்டம் கூடி பேட்டி காணுவதிலும் என்ன வேண்டு கோள் இருக்கிறது.

"ஐயா எங்களுக்கு பிழைப்பு குறைந்துபோய் விட்டது, ஒரு கோர்ட்டிலேயே எல்லா வக்கீல் களும் வந்து முட்டிக்கொள்ளுகிறார்கள், இதனால் வக்கீல் பிழைப்புக்கும் மரியாதை குறைகிறது, ஆதலால் இக்கூட்டத்தைக் கொஞ்சம் தூரையுங் கள் அல்லது இன்னம் ஒரு கோர்ட்டாவது ஏற் படுத்துங்கள், பார்ப்பனரல்லாத வக்கீல்கள் அநியமாகி விடுகிறார் ஆதலால் வக்கீல் பரீக்ஷை யை இன்னம் கொஞ்சம் அதிக செலவும் கஷ்ட மும் ஆக்குங்கள். நம்மைப்போல் பிச்சைஎடுத்து அவர்கள் படிக்கமுடியாது. வேறு வேலைக்கு போய்விடுவார்கள். பார்ப்பனரல்லாத வக்கீல் கள் அதிகமாய் வரக்கூடாது என்கிற எண்ணத் தின்பேரில் 2வது கிரேடு வக்கீல் பரீக்ஷைகளை யும் 1வது கிரேடு வக்கீல் பரீக்ஷைகளையும் எடுத்தும்கூட பி. ஏ. பி. எல். வகுப்பிலும் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் படித்துவருகிறார் களை இதை எப்படியாவது ஒழித்து இன்னம் கொஞ்சம் செலவும் அதிகமான கஷ்டமும்

இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

மகாத்மா வரவேற்பு.

கதின்போல் நமது பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு இடையூறு அதாவது அரசியலின் பேரினாலும் கடவுள் மோக்ஷம், மதம் என்னும் பேரினாலும் எவ்வளவு கொடுமையும் சூழ்ச்சிகளும் செய்து வந்தார்களோ வருகிறார்களோ அதுபோலவே ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் முதலிய பார்ப்பனர்களும் அவருடைய பார்ப்பன சிஷ்யர்களும் பார்ப்பனரல்லாத சில கூலிகளும் சூழ்ச்சிசெய்து வருவதாக நாம் நினைப்பதற்கு இடமேற்பட்டு வருவதற்குத் தகுந்தாற்போல் பல இடங்களில் இருந்து சமாச்சாரங்களும் வந்துகொண்டிருக்கின்றன. இச்சூழ்ச்சிகளுக்கு பெரும்பாலும் மகாத்மா வாவை ஒரு ஆயுதமாக உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள் என்றுப் தெரியவருகிறது. "மகாத்மாவின் தென்னாட்டு விஜயம்" என்னும் பேரால் கதர் பண்டை செலவுசெய்து ஆங்காங்கு போய் பார்ப்பனீய விஷங்களைப் பரப்ப உபயோகித்தக் கொள்ளுவதாகவும் தெரிகிறது. ஆனபோதிலும் நமக்கு அதைப்பற்றிப் பயம் ஒரு சிறிது மில்லை என்றே சொல்லுவோம். மகாத்மாவை நாம் எல்லோரும் சேர்ந்து வரவேற்கவேண்டியதுதான். நாம் எல்லோரும் அவரது வருகையின் கருத்துக்கு ஆதாவளிக்கவேண்டியதுதான். தாராளமாய்ப் பணமும் கொடுக்கவேண்டியதுதான். அதைப்பற்றி நாம் ஒரு சிறிதும் பின்வாங்கக்கூடாது என்பதே நமது கெட்டியான அபிப்பிராயம். அப்படி நமமுடைய பணமும் நம்முடைய ஆதரிப்பும் நமது கெடுதிக்கும் இழிவுக்கும் சுயமரியாதை அழிவுக்கும் உபயோகப்படுமானால் நாம் என்ன செய்யவேண்டியது என்பது நமக்குத் தெரியும். கதர் என்பதாக குருட்டு நம்பிக்கையில் விழுந்து உழன்றுகொண்டு நமது சுயமரியாதை பறிபோவதைப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம் என்பதாக உறுதி கூறுகிறோம்.

பார்ப்பனர்களின் அரசியல் புரட்டுகளையும், மதப்புரட்டுகளையும் கண்டகண்டவிடங்களில்எல்லாம்நாம்அவற்றை தாராளமாய் கண்டிக்கவில்லையா? நமது எதிரிகளும் அறிவிலிகளும் நம்மை தேசத்துரோகி என்கிறார்கள் என்றே மதத்துரோகி என்கிறார்கள்என்றே நாஸ்திகர்கள் என்கிறார்கள் என்றே பயந்து நமது மனச்சாக்ஷியை எங்காவது மாற்றிக் கொண்டோமா? அதுபோலவே கதர் இயக்கத்திலும் பார்ப்பனப் புரட்டுகளைக்கண்டோமானால நம்மை கதர் துரோகி என்று பிறர் சொல்வார்களே எனப் பயந்துகொண்டு ஒருக்காலும் வாயை மூடிக்கொண்டிருக்கமாட்டோம். "தேசத்துரோகி, ராஜத்துரோகி, தெய்வத்துரோகி, மதத்துரோகி, பிராமணத்துவேஷி, காங்கிரஸ்துரோகி, சுயராஜ்யக்கட்சித் துரோகி" முதலிய எத்தனையோ "துரோகியும் துவேஷியும்" ஆகி ஜெயிலுக்கும் நாகத்திற்கும் போனாலும்சரி நமது சுயமரியாதையே நமது பிறப்புரிமை என்று நமக்குப் பட்டதைச் சொல்லிவரும்போது கதர்த்துரோகிப் பூச்சாண்டிக்கு ஒருக்காலும் பயந்துவிடமாட்டோம் இப்பொழுது தமிழ்நாடு கதர் ஸ்தாபனத்தில் 100க்கு 75 பேருக்கு மேலாகவே பார்ப்பனர்கள் மாதம் 30, 40, 50, 75, 100, 150 என்பதாக சம்பளம் பெற்றுக் கொள்ளுகொண்டு பார்ப்பன அக்கிரஹாரம் சத்திரம்போல் வாழ்ந்து வருவது நமக்குத் தெரியும். ஆனாலும் அதைப்பற்றி நமக்கு அவ்வளவு அதிகமான ஆத்திரமில்லை. ஆனால் அவர்கள் அதை நமக்கு கெடுதிசெய்ய ஆதாரமாய் உபயோகித்துக்கொள்வதைத்தான் சகிக்கமுடியவில்லை. "சுதேசமித்திரன்" எப்படி நமது பங்கு, நமது சந்தாப்பணம், நமது விளம்பரப் பணம் ஆகியதைக் காண்டு நமது சமூகத்திற்குக் கேடுசூழும் காரியத்தையே "தேசசேவை" "தேசியப்பத்திரிகை" என்னும் பேரால் பரப்பிவருகிறதோ அதுபோலவே நமது "ஏழை மக்களுக்கு சாப்பாடு" 'குடியானவர்களுக்குதொழில்' என்று சொல்லிக்கொண்டு செய்யும் கொடுமைகளை பார்த்துக்கொண்டும் நமமை எவனுவது கதர் துரோகி என்று சொல்லிவிடுவானே எனப் பயந்து வாயை மூடிக்கொண்டிருந்தால் அதைவிட பயங்காளித்தனமான காரியம் வேறிலலை என்பதே நமதபிப்பிராயம். ஆனால் மகாத்மா காந்தி அவர்கள் இவ்வியக்கத்தலைவராய் இருப்பதால் அப்படிச் சொல்லுவது மகாத்மாவை குற்றம் சொல்லுவதாகுமோ அவருக்கு துரோகம் செய்ததாகுமோ என்பதற்கு சிலமுட நம்பிக்கைகாரர் பயப்படவும் கூடும். இப்படிச் சொல்லி சில பார்ப்பனர்கள் பாமர மக்களை எமாற்றவும் கூடும். ஆனாலும அதற்கும் நாம் பயப்படக்கூடாது என்பதுதான நமது அபிப்பிராயம் பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தாரின் அக்கிரமங்களை எடுத்துச்சொல்வது ராஜத்துரோகமாகாது. பஞ்சாபில் டையர் ராக்ஷதக் நன்மையாய் நடந்துகொண்டார் "அவரைத் தண்டிக்கவேண்டும், அவரைத் தூக்கிலிடவேண்டும்" என்று நாம் சொன்னதும், "லார்ட் செம்ஸ்போர்டை விசாரணை செய்து தண்டிக்கவேண்டும" என்று நாம் சொன்னதும ஜார்ஜ் மன்னரை வைததாகுமா? ஜார்ஜ் மன்னரைத துவேஷித்ததாகுமா? அல்லது இது ஜார்ஜ் மன்னருக்கு துவேஷமாகுமா என்பதை யோசித்துப்பாருங்கள் ஆகையால் நாம் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. மகாத்மா நம்மவர், அவர் கொள்கையால்லது நாட்டுக்கு சுயாஜ்யமோ சுயமரியாதையோ சமத்துவமோ விடுதலையோ கிடைப்பது என்பது முடியாத காரியம். மகாத்மா ஒரு வருஷத்தில் செய்ததலேலை இந்த நாட்டில் இதுவரை தங்கள் தங்கள் ஆயுள் முழுவதும் செலவழித்தும் செய்தலாகனைக் காணோம். ஆதலால் அப்பேர்ப்பட்ட பெரியாரை வணகுவதற்கும் வாவேற்பதற்கும் பின்பற்றுவதற்கும். இப்பார்ப்பனர்கள் சூழ்ச்சிக்கு பயந்து நாம் பின்வாங்கக்கூடாது.

தவிர மகாத்மா நமது பார்ப்பனர்களின் சூழ்ச்சியை அறியாதார் என்று நினைப்பதும் அறியாமையாகும். அவரிடத்தில் உள்ள தயவினாலும் தாக்ஷண்யதினாலும கருணையினாலும் சிற்சில சமயங்களில் இப்பார்ப்பனர்களின் சூழ்ச்சிக்கு இடம் கொடுத்து விடப்படுகிறதே அல்லாமல் அவரை அவர்கள் ஏய்த்துவிட்டதாகவோ அல்லது அவர் அறியாமல் செய்துவிடுகிறார் என்றோ ஒருக்காலும் சொல்ல முடியாது. அவருக்குச் சில பார்ப்பனர்களிடத்தில் இருக்கும் தாட்சண்ணியம் என்கிற பலஹீனத்தை சிலர் அதிகமாய் உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். அதனால் நமக்கு சில சமயங்களில் கெடுதி நேரிடுவதமுண்டு. ஆனாலும் அதுவும் அளவுக்கு மீறுகிறபோது நாம் அதையும் எதிர்க்கத்தயாராயிருந்து வருகிறோமேயல்லாமல் அதற்காக நாம் அடியோடு விட்டுக்கொடுத்துக்கொண்டிருக்கவில்லை. இருக்கவுமாட்டோம். தவிர மகாத்மாவிற்கு இந்தப் பார்ப்பனர்களின்யோக்கியதை நன்றாய்ப்க தெரியும் என்பதற்கு நாம் ஒரு உதாரணம் சொல்லுவோம். பெல்காம் காங்கிரசின்போது மகாத்மாவிடம் நாம் பேசிக்கொண்டிருந்த சமயம் (அதாவது கதர் போர்டு சமபந்தமாகவே அதிலுள்ள உத்தியோகங்கள் மிகுதியும் பார்ப்பனர்களுக்கே கொடுக்கப்பட்டுவருகிறது என்கிற காரணத்தால் கதர்போர்டுபிரசிடெண்டுஎன்கிற முறையில் நமக்கும் கதர் போர்டு காரியதரிசி என்கிற முறையில் ஸ்ரீமான் கே.சந்தானம் அவர்களுக்கும் அபிப்பிராய பேத மேற்பட்டுவிட்டது. இதில் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் ஸ்ரீமான் சந்தானத்திற்குப் பக்கபலமாயிருந்தார் இது விஷயமாய் எங்களுக்குள் ஒரு முடிவும்ஏற்பட இடமிலலாமலேபோகவே கடைசியாக காரியதரிசி ஸ்ரீமான் கே. சந்தானம் அவர்கள் ராஜினாமாக கொடுத்துவிட்டார். ராஜினாமாகொடுத்து விட்டதோடு சுமமா இராமல் இந்த ராஜினாமாவை மகாத்மா தகவலுக்கு கொண்டுபோய் ஸ்ரீமான் சந்தானத்தின் ராஜினாமாவைப்பின் வாங்கிக்கொள்ளும்படி செய்ய மகாத்மாவையும் தூண்டப்பட்டது.) மகாத்மாநம்மை கூப்பிட்டு ஸ்ரீமான்சந்தானம்என்ராஜினாமாக் கொடுத்தார்? என்று கேட்டார். நான் கதர் போர்டு சமபந்தமான உத்தியோகங்களே பெரிதும் பார்ப்பனர்களுக்கே அவர் கொடுப்பதால் அதன் தலைவர் என்கிற முறையில் பார்ப்பனரல்லாதாருக்குக் கொடுக்க வேண்டும் என்பதாகச் சொன்னதினால் அவருக்குத்திருப்தியில்லாமல் அவர் ராஜினாமாக் கொடுத்து விட்டார் என்று சொன்னேன்.

மகாத்மா:—இது ஸ்ரீமான ராஜகோபாலாச்சாரியாருக்குத்தெரியாதா என்றார்.

நான்:—இது விஷயத்தில் அவர்கள் எல்லோரும் ஒன்று தான் என்று சொன்னேன்.

மகாத்மா:—அப்படியானால் உமக்கு ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரிடம் கூட நம்பிக்கை இல்லையா என்றார்.

நான்—பார்ப்பனர்களுக்கு அவர்களிடம் இருக்கும் நம்பிக்கை அவ்வளவு எனக்கு அவரிடம் இல்லை என்றுசொன்னேன்.

மகாத்மா.—அப்படியானால் பார்ப்பனர்களிடத்திலேயே உனக்கு நம்பிக்கையில்லையா என்றார்.

நான—இந்த விஷயத்தில் நம்பிக்கையே உண்டாவதில்லையே என்றேன்.

மகாத்மா:—அப்படியானால் உலகத்திலேயே நல்ல பார்ப்பனர் இல்லை என்பது உமது அபிப்பிராயமா என்றார்.

நான்:—என் கண்ணுக்குத் தென்படுவதில்லையே நான் என்ன செய்யட்டும் என்றேன்.

மகாத்மா:—அப்படிச்சொல்லாதீர்கள். நான் ஒரு நல்ல பார்ப்பனரைக் கண்டிருக்கிறேன். அவர்தான் சோக்கலே. அவர் தன்னைப் பிராமணன் என்று சொல்லிக்கொண்டதே கிடையாது. யாராவது அவரை பிராமணன் என்று கூப்பிட்டாலும், மரியாதை செய்தாலும் ஒப்புக்கொள்ளாததோடு உடனே ஆட்சேபித்துத் தனக்கு அந்த யோக்கியதை இல்லை என்பதை எடுத்துக் காட்டுவார்.

நான்—மகாத்மா கண்ணுக்கே ஒரே ஒரு யோக்கியமான பிராமணன் மாத்திரம் தென்பட்டு இருக்கும்போது என்போன்றவர்கள் கண்ணுக்கு எப்படித்தென்படக் கூடும்; என்றேன்.

மகாத்மா:—(வேடிக்கையாய் சிரித்துவிட்டு) மறுபடியும் ஸ்ரீமான் சந்தானம் ராஜீனாமாவை வாபீசு பெற்றுக்கொண்டு காரியதரிசி வேலை பார்க்கக்கூடாதா என்று என்னைக்கேட்டார்.

நான்;—நன்றாய் பார்க்கலாம் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை; ஆனால் பார்ப்பனரல்லாதாருக்கு சரிபாதி அதாவது 100க்கு50 உத்தியோகமாவது கொடுக்கக் கட்டுப்படவேண்டும் என்றேன். ஸ்ரீமான் பாங்கர் ஆச்சரியப்பட்டு 100க்கு 50 நீதம் போதுமா? அது கூடவா இப்போது கொடுக்கப்படவில்லை என்கிறீர் என்று கேட்டார்.

நான்:—ஆம் என்றேன்,

சங்கர்லால் பாங்கர்:—ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் 100க்கு 50 போதுமென்கிறாரே இது என்ன அதிசயம்? என்றார்.

மகாத்மா:—நான் எந்தபோதும் சம்மதியேன் 100க்கு 90 கொடுக்கவேண்டும்.

நான்:—100-க்கு 50 கொடுப்பதாய் நீர்மானம் போட ஒப்புக்கொள்ள முடியாது என்கிறவர்கள் 100-க்கு 90-கொடுப்பதெப்படி? என்றேன்.

மகாத்மா:—நீர்மானம் போடவேண்டும் என்று நான் சொல்லவரவில்லை ஆனால், 100க்கு 90 கொடுக்கவேண்டியது நியமம் என்று சொல்லுவேன் என்று சொல்லிவிட்டு ஸ்ரீமான் சந்தானத்தைப்பார்த்து பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகம் கொடுப்பதில உமக்கென்ன ஆட்சேபணை என்று கேட்டார்

சந்தானம்:—எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஒருவரும் வருவதில்லையே நான் என்ன செய்யட்டும் என்று சொன்னார்.

மகாத்மா:—என்னைப் பார்த்து என்ன நாயக்கர் ஜீ? யாரும வருவதில்லை என்கிறீரே என்ன சொல்லுகிறீர்?

நான்:—அது சரியல்ல, என் வருவதில்லை என்பதற்கே காரணம வேண்டும். முதலாவது வேலை கொடுக்கவேண்டும். வேலை கொடுத்து அவரை மரியாதையாக நடத்தவேண்டும், இந்த இரண்டு காரியம் இருந்தால் எவ்வளவோ பேர் வேண்டுமானலும் கிடைப்பார்கள்,

மகாத்மா:—அப்படியானால் இனிமேல் உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரம் நீங்கள் வைத்துக்கொள்ளுகிறீர்களா?

நான்:—ஸ்ரீமான் சந்தானம் அவர்கள் தன்னால் முடியாதென்றால் நானே பார்த்துக் கொள்ளுகிறேன்.

மகாத்மா:—ஸ்ரீமான் சந்தானத்தப்பார்த்து இனி உத்தியோகஸ்தர்கள் நியமனம் நாயக்கரிடம் விட்டுவிடுங்கள் என்றார்.

சந்தானம்:—எனக்கு ஆட்சேபணையில்லை—கி. ராஜகோபாலாச்சாரியார்—குறுக்கே கலியிட்டு அது முடியாத காரியம். எனென்றால் யார் வேலை வாங்குகிறார்களோ அவர்கள் தான் வேலைக்காரரை நியமிக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் ஒருவர் நியமிப்பது, ஒருவர் வேலைவாங்குவதுமாயுமிருந்தால் வேலை நடக்காது என்றார்,

மகாத்மா:—உடனே சிரித்துக்கொண்டு நாயக்கர் சொல்லுவதில் ஏதோ உண்மை இருக்கும்போல் தோன்றுகிறது. இப்போது நான் காங்கிரஸ் பிரசிடெண்டு ஸ்ரீமான் ஜவாரிலால்நேரு காரியதரிசி, நான் நியமித்த ஆளைக்கொண்டு ஜவாரிலால்வேலை வாங்க முடியாவிட்டால் நானவது குற்றவாளியாகவேண்டும், அல்லது ஜவாரிலாலாவது குற்றவாளியாகவேண்டும். நியமிக்கப்பட்ட ஆளிடம் குற்றமிருக்க நியாயமில்லை. சர்க்காரில் கூட நியமிப்பவர் ஒருவர். வேலை வாங்குபவர் ஒருவர் அப்படிக்கிருக்க அதில் எங்கேயாவது வேலை வாங்குபவர் நியமிக்காததால் வேலைக்காரர்கள் சரியாய் நடக்கவில்லை என்று ஏற்பட்டிருக்கிறதா? என்று கேட்டார்.

கி. ராஜகோபாலாச்சாரியார்:—வகுப்பு பிரிவினை பார்த்தால் போதுமா வேலை நடக்கவேண்டாமா? தகுதியும் கூட பார்க்கவேண்டாமா என்றார்.

மகாத்மா:—நாயக்கர் அதையும் பார்த்துக்கொள்வார் என்றே நினைக்கிறேன். அப்படி பார்ப்பனரல்லாதாரை நியமித்ததின் மூலம் ஏதாவது வேலைகள் கொஞ்சம் கெட்டுப்போனாலும் குற்றமில்லை. இரண்டு காரியங்களும் நடக்கவேண்டியது தான். அதாவது கதர் விஷயம் எப்படி முக்கியமானதோ அதுபோல வகுப்பு அதிருப்திகளும் நீங்கவேண்டியதும் மிக முக்கியமானது. ஆகலால் கதர்போர்டு சம்பந்தமான உத்தியோகநியமனம் நாயக்கர் கையில் இருக்கட்டும் என்று சொன்னார்.

பிறகு எல்லோரும் சரி என்று ஒப்புக்கொண்டதாக அவருக்கு ஜாடை காட்டிவிட்டு வந்துவிட்டோம். பிறகு எப்படி எப்படியோ பாடுபட்டு கதர் ஆதிக்கம் முழுவதும் தங்கள் கைக்கே வரும்படியாக பார்ப்பனர்கள் செய்துகொண்டார்கள். அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. நாமும் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல் கதருக்காக எவ்வளவு உழைக்கவேண்டுமோ அவ்வளவும் உழைத்தோம்; உழைத்துக் கொண்டுமிருக்கிறோம்; இனியும் உழைக்கப் போகிறோம். எனவே மகாத்மா காந்தி இவர்களை சரியாலபடி அறிந்துகொள்ளவில்லை என நாம் நினைப்பது தப்பு என்றே சொல்லுவோம். ஆகலால் மகாத்மாவை வரவேற்கும் விஷயத்திலும் பணம கொடுக்கும் விஷயத்திலும் நம்முடைய பங்கை நாமும் சரியாக செலுத்தவேண்டும் சில இடங்களில் பார்ப்பனரல்லாதார் தனியாய் வசூல்செய்தோ தனியாய் வரவேற்றோ தங்கள் கடமையைச் செய்யலாம் என்பதாகசிலர் அபிப்பிராயப்படுவதாகவும் தெரியவருகிறது. அதுவிஷயத்திலும் நமக்கு ஆசேபணை இல்லை. சென்னை, மதுரை, குடியேத்தம், வேலூர் முதலிய இடங்களில் நம்மை நேரிலும் கேட்டார்கள். நாம் அப்படியாவது சரி, எப்படியாவது நம்கடமையைச் செய்யவேண்டும் என்றேதான் சொன்னோம். கடைசியாகச் சொல்லுவதென்னவென்றால் மகாத்மாவரவு நாள் சமீபத்திலிருப்பதால ஆங்காங்குள்ளவர்கள் தனியாகவோ கலந்தோ தங்களுக்கு தோன்றுகிறபடி வ்தாவது ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கோருகிறோம்.

நாகர்கோயில் தாலூகா மறவர் சங்கம்:—20-2-27 தேதியில் திருநெல்வேலி ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்டு அவர்கள் தலைமையில் இச்சங்கம் கூடிற்று. அவ்வமயம் ஸ்ரீமான்கள் குமாரசாமி ரெட்டியார் (ஜில்லாபோர்டு பிரசிடெண்டு) நிதம்பரநாதமுதலியார் எம். எல். சி., கல்வியிலாகாத் தலைவர் சுப்பையா ஐயர், குற்றாலம் டிப்டி சூப்பிரண்டெண்டு காடேச ஐயர் முதலிவர்கள் வந்திருந்தார்கள். மறவர்களின்கல்வியபிவிருத்தி, விவசாயம், கைத்தொழில் முதலிய விஷயங்களைப்பற்றி எடுத்துரைக்கப்பட்டு பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

* * *

ஸ்ரீ சுவாமி போதானந்தர்:— சிவகிரி மடத்தைச் சார்ந்த சுவாமி போதானந்தர் அவர்கள் 15 தினங்களாக கோயமுத்தூரில் தங்கி வருகிறார். சுவாமிகளின் முயற்சியால் "சகோதர சங்கம்" என்னும் பெயரால் ஒரு சங்கம் நிறுவப்பட்டது. தாழ்த்தப்பட்டவர், மகமதியர் கிறிஸ்தவர் முதலானவர் அங்கத்தினராகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். சுவாமிகள் இவ்விடம் ஒரு குருகுலம் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்து வருகிறார் என்று ஸ்ரீமான் வி. என். இரங்கநாதன் அறிவிக்கிறார்.

* * *

தேகாப்பியாச அபிவிருத்தி சங்கம் செவ்வாய்ப்பேட்டை:— இச் சங்கத்தின் மஹாஜனக் கூட்டம் சங்கத்தலைவர் ஸ்ரீமான் வி. சொக்கையா அவர்கள் தலைமையின் கீழ் 15-2-27 தேதியில் நடை பெற்றது. இச்சங்கத்தின் வருஷக்கொண்டாட்டத்தை அடுத்த ஜூன் மாதத்தில் கூட்டுவதென்றும் பேரலல் பார் அப்பியாசம், பளுவு தூக்குதல், ஓடுதல் தண்டால், தேகாப்பியாச சம்பந்தமான கட்டுமஸ்தைதல் ஆகியபோட்டிப் பரீக்ஷையில் வெற்றி பெற்றோர்க்கு அவ்வமயம்பரிசளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாக காரியதரிசி அறிவிக்கிறார்.

* * *

மதுரை தமிழ் நாடு வாலிபர் சங்கம்:— மதுரைதலைவிரித்தசாமி கோவில் தெருவில் குருநாத ஸ்வாமி கோயில் ஸ்தாபிக்கப்பட்ட தமிழ் நாடு வாலிபர் சங்கத்தினுதாவில் திரு நாராயணபின்னை பி. வ. பி. எல். தலைமையின் கீழ் யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரி தமிழாசிரியர் திருவாளர் வ. சு. இராஜஐயனர் அவர்கள் "தொழிற்கல்வி" என்ற விஷயம் பற்றி ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர் என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

வேலூர்.

பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்திறப்பு விழா

திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியோர் வருகையும், பல வரவேற்புப் பத்திரங்களும்.

வேலூரில் இளைஞர் சங்கம் திறத்தற்பொருட்டு திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர், திரு. சுரேந்திரநாத ஆரியா, திரு. ஜே. எஸ். கண்ணப்பர் முதலியோர் இன்று வந்திருந்தார்கள். பகல் இரண்டு மணிக்கு திரு. இராமசாமி நாயக்கர் அவர்களின் தலைமையின் கீழ் டவுன் ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. திரு சுரேந்திரநாத ஆரியாவும், வேலூர் வி.எஸ் பத்மநாப முதலியாரும் இளைஞர்சங்க அபிவிருத்தியைப் பற்றியும், அதனால் சேரும் நன்மைகளைப்பற்றியும் எடுத்துரைத்தார்கள். திரு. இராமசாமி நாயக்கர் அவர்கள் இளைஞர் சங்கத்தைத்திறந்ததோடு, பார்ப்பனரல்லாதார் இயக்கத்தால் சேர்ந்த நன்மைகளையும், அதன் அபிவிருத்தியும் காங்கிரஸ் பெயரைச்சொல்லிக்கொண்டு சிலர் சுயநல வாலிபர்கள் மயக்கத்தைக்கெடுத்து விடுதலையையும் அதன் மூலம் பார்ப்பனர் சுயநலத்தையும் பற்றி விளக்கமாய் எடுத்துரைத்தார். பிறகு நாயக்கர் அவர்களுக்குத் திராவிட சங்கத்தின் சார்பாய் ஒரு வரவேற்புப் பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது.

ஊர்வலம்

திரு நாயக்கர், ஆரியா, கண்ணப்பர் முதலியோர் ஊர்வலமாய் பாண்டு வாத்தியங்கள் முழங்க ஜேசப்தம் ஒலிக்கப் பல தெருக்கள்வழியே அழைத்துச்செல்லப்பட்டார்கள். அவர்களுக்கிடையிடையே போடப்பட்ட மாலைகளுக்கும், இடையிடையே பல வீட்டுக்காரர்கள் கற்கண்டு பழம் சந்தனம் வெற்றிலைபாக்கு விணியோகத்திற்கும் கணக்கு கிடையாது. ஊர்வலம் பிராமணரல்லாதார் கதர்க் கடையை அடைந்ததும், மூவருக்கும் கதர் மாலைகள் போடப்பட்டன. திரு நாயக்கருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது வந்திருந்தோருக்கு கற்கண்டு வழங்கப்பட்டது. பின்னர் பிராமணரல்லாதார் காபி ஓட்டலில் மூவரும் வரவேற்கப்பட்டு அவர்கட்கு ரோஜா மாலை போடப்பட்டன. அங்கு காப்பி ஹோட்டல் சொந்தக்காரர்களால் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

ஆதிதிராவிடர்கள் கூட்டம்

பிராமணரல்லாத காப்பி ஹோட்டலிலிருந்து ஊர்வலம் ஆதி திராவிடர்கள் இருப்பிடத்திற்குச் சென்றது. அங்கு திரு. ஐ. கணபதி பிள்ளை யவர்களைத் தலைமையாய்க்கொண்ட ஆதி திராவிட சமூகத்தார் மூவரையும்மனமுவந்து வரவேற்றனர். புகைப்படமொன்று எடுக்கப்பட்டது. திரு நாயக்கரவர்கட்கு வாழ்த்துப்பத்திரம் ஒன்று திரு ஐ கணபதி பிள்ளை அவர்களால் படித்துக் கொடுக்கப்பட்டதுடன் நாயக்கர் மீது ஒரு கீர்த்தனையும் பாடப்பட்டது,

பொதுக் கூட்டம்

மாலை 6 மணிக்குக் கோட்டை மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. திரு. வி. எஸ். பத்மநாப முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் நிர்மாணத்திட்டத்தைப்பற்றியும், மதுரை மகாநாட்டைப் பற்றியும், கேட்போர் மனம் உருகப் பேசினார். குழப்பம் செய்ய வேண்டுமென்ற வந்திருந்த சில ஆசாமிகள் வாய் திறக்கக் கூடாமல் தாங்களும் கூட சேர்ந்து கரி த்துக்கொண்டே இருந்து தாங்கள் செய்ய வந்த காரியத்தை மறந்து விட்டார்கள். அனேக பார்ப்பனர்களும் வந்திருந்தார்கள். பிறகு ஜில்லா போர்டு பிரசிடெண்ட் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் வந்தனம் சொல்லப்பட்டு கூட்டம் முடிந்தது

நாமக்கல்

இவ்வூர் திராவிட சங்கத்திருப்பொருள் தொ டர்ப்பதற்காக இவ்வூர் வாடகைக்கும் பெனியின் விசாலத்தகாரரான திரு சீனிவாசப் பிள்ளை கத்த புராணகாட்சம் இரவு 9.30 மணிக்கு திரு ஈ வெ இராமசாமி நாயக்கர் அவர்கள் ஆசரவின் கீழ் பத்திச்சுவை கன்னி தொட்டச்சொட்ட பிக அழகாய் நடாத்திக்காட்டினர். கொட்டகையில் உட் காரக்கூட இடமில்லாமல் மக்கள் கரம்பி திரு ந்தனர். திரு நாயக்கர், ஆரியா, கண்ணப்பர் மோகாட்டகைக்குப் பரவசம், கூடியிருந்தோர் பெரும் ஆரவாரம் செய்தார்கள். திரைகள் மூவரும் காடகொந்தக்காரரால் மாலைபிட்டு உபசரிக்கப் பட்டனர். திரு நாயக்கரும், ஆரியாவும் நாடக கொந்தக்காரரின் கொடையின் திறத்தைப்பற்றி யும் நடிப்பின் எழிலைப்பற்றியும் விபத்து பேசினர்கள்.

புறப்பாடு

திரு நாயக்கர் அன்று இரவு மெயிலில் கரோடு சென்றார். திரு கண்ணப்பர் அன்பு காலை வண்டியில் திருவண்ணமலை சென்றார். திரு ஆரியா மறுநாள் பெங்களூர் எக்ஸ்பிரஸில் அம்பூர் சென்றார் என்ற ஒரு கருபர் எழுதுகிறார்.

திருநெல்வேலியிலிருந்து ஜஸ்டிஸ் நிருபர் டாட்டபி:— 26-2-27 தேதியில் காலை பார்ப்பனரல்லாத வாலிபர்சங்கப்பெருங்கூட்டத்தார் "ஜஸ்டிஸ்" "திராவிடன்" "குடி அரசு" ஆகிய பத்திரிகைகளுக்கு 40 சந்தாதாரர்களைச் சேர்த்தார்கள். மாலை 6 மணிக்கு இந்து கல்லூரி தலைமையாசிரியர் திருவாளர் ஆர். முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் சங்கமேடையில் கூடியிருந்த பலர் பார்ப்பனீய பகிஷ்கார சம்பந்தமான சொற்பொழிவு நிகழ்த்தினர். பார்ப்பனரல்லார் கதர்ச் சாலியம் காபி சாப்பாட்டு விடுதிகளும் கூட்டுறவு முறையில் ஏற்படுத்தவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கென கமிட்டியும் நியமிக்கப்பட்டது என திருவாளர் எ. இராமநாதனே தெரிவிக்கிறார்.

* * *

கோயமுத்தூரில் உள்ள தேவாங்கதலத்தினரால் கிர்வகிக்கப்பட்டுவரும் சௌடம்மாள் கோவில் என்ற திவ்ய கேஷத்திரத்தில் தைமாதம் 25 தேதி நடைபெற்ற விக்ரகபிரதிஷ்டையும் கலியாண உற்சவம் முதலிய சகலவைபவங்களும் வழக்கம்போல் பார்ப்பனர்களைக்கொண்டு நடத்தாமல் தேவாங்கஜாதிக் குருக்களைக்கொண்டு நடத்தப்பட்டது என்று கோயமுத்தூர் ஸ்ரீமான் வெரிவாட செட்டியார் அறிவிக்கிறார்.

* * *

திருச்சியில் ஜஸ்டிஸ் தீருநாள்:— 26-2-27 தேதியில் மருத்துவர் சங்கததில் திருவாளர் மு. பிச்சைமுத்து பண்டிதர் அவைத்தலைமையில் மீட்டிங் கூடி "குடி அரசு" "திராவிடன்" "ஜஸ்டிஸ்" ஆகிய பத்திரிகைகளை எல்லாரும்ஆதரித்து அவற்றிற்குச் சந்தாதாரர்களாகச் சேரவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதோடு ஸ்ரீ கைவல்லிய ஸ்வாமியாருக்கும் நன்றிகூறப்படடது. திருவாளர்கள் பக்கிரிசாமி பண்டிதரும் பிரம பண்டிதரும் பிரசங்கித்தார்கள் என்று திரு. பா. சுத்தரராஜ் அறிவிக்கிறார்.

திரட்டுப்பால்

வி. வெங்கிடாசலம் நாயுடு(சென்னைச் சர்வகலாசாலை உபயூத்தியட்சகர்):— கடவுள் மனிதனைப் படைத்தார். மனிதன் விதவையைய உண்டுபண்ணினான்.

மேற்படியார்:—பல குடும்பங்களில் விதவையாயுள்ள கன்னிப் பெண்களை மறுமணஞ் செய்து கொடுத்தால்தான் கள் மணஞ்செய்து கொள்ளநேரிடுமென்பதைப் பெற்றோர்களிடம் இளைஞர்கள் போராடவேண்டும்.


மேற்படியார்:—பல குடும்பங்களில் வாலிபக்கடந்தவர்களான தாயும் தகப்பனும் ஓர் அறையில் சல்லாபமாக இருந்து இல்லற இன்பங்களை அநுபவிக்கையில், அடுத்த அறையில் பதினாறு வயதுள்ள பிரம்மசாரி அவர்களுடைய விகாரவப் பெண் தனைக் கனிய பற்றுகையில் கிடந்து புரண்டு புரண்டு தூங்குகிறான். இஃதென்ன அநியாயம்!

மேற்படியார்:—தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று நாட்டிலே பேசுகிறோம். அனல் வீடுகளிலும் தீண்டப் படாதவரை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் இந்த நிலைமை நியான பாலிய விகாரவகளின் கதியென்ன?

காந்தியடிகளிடம் ஸ்ரீ சக்கரவர்த்தி:— "தங்களுடைய கதர்த்திட்டம் எனக்குப் பிடிக்கவில்லை இருந்தாலும் அது சுயமரியாதைக் கருத்துடையதாக இருப்பதால் கதர்க் சுல்லா வேண்டுமானால் அணிந்து கொள்கிறேன்" (நவசக்தி)

சுயராஜ்யக் கக்ஷி எங்கே?

சுயராஜ்யக் கட்சியாரின் ஆர்ப்பாட்டம் அதிகமாக அடங்கிவிட்டது. சென்னையில் வெற்றி பெற்றுவிட்டதாகச் சொல்லிகொளறாத்தி காங்கிரசு செய்த ஆரவாரங்கள் கனவுபோல் போய்விட்டன. சென்னைக்கு வந்தவுடனே காங்கிரஸ் ஸ்தாபனத்தை அனுசரித்து சுயேச்சை மந்திரி சபையை எதிர்க்கப்போவதாக ஆர்ப்பாட்டஞ் செய்தார்கள் ஈரளிதுவரையில் ஒன்றும் நடைபெறவில்லை. மந்திரிகளில் ஒருவரான கனம் ஆரோக்கியசாமி முதலியார் பூர்ண மதுவிலக்கு சாத்தியமில்லையென்றும், பொதுஜனங்கள் அதைக் கேட்கவில்லையென்றும் பிரசாரம் செய்துவருகிறார். எந்த மந்திரி சபையையும் எதிர்க்கவேண்டுமென்று காங்கிரஸ் தீர்மானஞ் செய்திருந்தும் எதிர்க்காமல் இருப்பது முதல் பிசகு. பூர்ண மதுவிலக்கை காங்கிரஸ் ஆதரித்து தீர்மானித்திருக்கும்போது அதை எதிர்த்து பிரசாரஞ் செய்யும் மந்திரி கோஷ்டியாரை ஆதரித்துக் கொண்டிருப்பது அதைவிடப் பெரிய பிசகு, முட்டுக்கட்டைப் பேச்சை தேர்தல் காலத்தில் முழக்கிக்கொண்டிருந்த சுயராஜ்யக் கட்சியார், இப்பொழுது எந்த இடத்தில் இருக்கிறார்களென்பதைக் கண்டுபிடிப்பதே கஷ்டமாயிருக்கிறது. மார்ச்சுமாதம் கூடப் போகும் சென்னை சட்டசபையில் அவர்களுடைய யோக்கியதை முற்றிலும் வெளிப்பட்டுவிடும். (தமிழ்நாடு)



தையிற் ஒன்றென்றெண்ணி
பெரி யெவர்க்கும் ஆற்றி-
னாலே பேதாபேதம்
கம்பொய் களவு சூது
கையும் தலைப்பாயாகில்
வம் வேறுரன் றண்டோ?
தெ உறுதியான
சம் ஆகும்தானே.

டி அரசு.

-ஆடி மாசி-மீ 23-உ

ண்டுகோள்.

திராவிடன்."

ில் தென்னிந்திய மகாஜன
ம்பெனியாரால் பாப்
னின் முன்னேற்றத்திற்கு
ல்,' 'திராவிடன்' என்கிற
திரிகைகள் முறையே இங்
மாகக்கடந்துவருகின்றன.
ல் கட்சியானது ஆசியல்
ருந்த காலமாகிய சென்ற
ாக மந்திரிகளின் ஆயிரக்
ப் கன்கொடைகளினாலும்
கர்களின் கன்கொடையா
ல வந்தன. இப்போது
ாமும் ஆவாரமும் அக்
மக்கள் இடையில் தங்க
ச் சரியாகப் பாப்பாத
னிடம் அளவுக்கு மீறின
பான பிரசாரம் செய்யா
இருந்தபோட்டகாலும்
கட்சியாராகிய பார்ப்ப
அனாலுமாய் இக்
ாகித்தக்கொண்டு காங்
ஸ்ஸும் பல பாமர மக்
றுதக்க பெயர்களால்
சய்தநின் பலனாலும்,
க்க நேரிட்டதால் இப்
ஷ்டத்திலிருக்கின்றன.
கட்சியார் இப்போது
சமூகத்தின் முற்போக்
தும் உண்மையான
சய்ய நல்ல சமயமும்
நகலிருர்கள். அதோடு
ந் நிர்மாணத் திட்டத்
ம் மேன்மையையும்
பரல்லாத மக்கள்
கிற ரகசியத்தையும்
னிலும் அதிகமாய்
ர்கள். இந்நிலையில்

இப்போது செய்யவேண்டிய வேலை பிரசாரமும் நிர்மாணத் திட்டம் நிறைவேற்றுதலுமே ஆகும். இக்காரியங்களுக்கு பத்திரிகைகள் அவசியம் என்பது நாம் சொல்லா மலே விளங்கும். ஆகவே பார்ப்பனரல்லாதார் சைவசம் இதுசமயம் மிகக் கஷ்டத்திலிருக்கும் தினசரி பத்திரிகைகள் முன் சொன்ன "ஜஸ்டிஸ்," "நியாயிடன்" என்கிற இரண்டே பத்திரிகைகள்தான். இவைகள் முன் மந்திரிமார்களும் மற்ற செல்வான்களும் சேர்ந்து மாதம் 1-க்கு 3000 முதல் 5000 ரூபாய் வரை கொடுத்துவந்தாலும் கஷ்டத்திலும் கடனிலும் நடைபெற்று வந்தநிலையில் இப்போது யாருடைய உதவியும் இல்லாத காலத்தில் எப்படி நடைபெறும் என்பதை வாசகர்களேதான் உணரவேண்டும். இவ்விரண்டு பத்திரிகைகளில் ஒரு பத்திரிகையை மாத்திரம் அதாவது "ஜஸ்டிஸ்" என்கிற இங்கிலீஷ் பத்திரிகையை மாத்திரம் ஸ்ரீமான் எ. ராமசாமி முதலியார் அவர்கள் இப்போது எற்றுக்கொண்டு அதனால் எற்படும் கஷ்டத்திற்கெல்லாம் தானே பொறுப்பாளனாகவோ அல்லது வேறுவிதமாகவோ சரிசெய்துகொள்வது என்கிற உத்தேசத்தின்பேரிலும் தாலும் எவ்வித ஜதியமில்லாமல் பத்தாயிரம்பது என்கிற உறுதியின்பேரிலும் ஒப்புக்கொண்டு எற்று நடத்திவருவதாய்த் தெரிகிறது. இந்த நிலைமையில் தமிழ் பத்திரிகையான "திராவிடனை" கவனிப்பாரின்றி லாபந்தரமாக்கவேண்டியதும் அல்லது நிறுத்திவிடவேண்டியதுதானை நிலைமையில் இருக்கிறது. அதன் கற்கால பத்திராதிபர்களும் மற்றும் காரியஸ்தர்களும் அதற்காக எவ்வளவோ கஷ்டநஷ்டப்பட்டு உழைத்து வந்திருந்தாலும் இப்போது அதன் நிலைமை சொல்லுவதற்கில்லாத நிலையில் எற்பட்டிருப்பதை நன்முய் அறிவார்கள் சுயராஜ்யம அடையும் விஷயத்திலும் மகாத்மாவின் நிர்மாணத்திட்ட விஷயத்திலும் இதுசமயம் நமது நாட்டு ஆசியல் நிட்டமென்பதைச் சொல்லுவதைவிட எதிலும் பின்வாங்கியதல்ல. அன்றியும் நம்மக்களசுயமரியாதைக்கு மற்ற எல்லாதிட்டங்களையும்விட அதிகமான பிரதானியத்தை இக்கட்சி கொடுத்திருகிறது. அன்றியும் ஆசியல் முதலிய உரிமையைவிட மற்ற லகுப்பாரை மற்றொரு வகுப்பார் ஏமாற்றிச் சூழ்ச்சி செய்து அதிகம்பெற்று நசுக்கிவிடுவார்களோ என்று எவ்வகுப்பாரும் பயப்படுவதற்கும் அவசரம்பிக்கைப் படுவதற்கும் இடமில்லாமல் எவ்விதஉரிமையும் அதிகாரமும் பதவியும் எல்லாவகுப்பாரும் அவரவர்கள் கூட்டத்திற்கு தகுந்தபடி பிரதிநிதித்துவம்பெறலாம் பெறவேண்டும் என்கிற வகுப்புவாரி உரிமையையும் பிரதிநிதித்துவத்தையும் வலியுறுத்துகிறது இப்படியிருக்கும்போது கொள்கைகளைப்பற்றி யாரும் எந்த வாகுப்பாரும் கல்ல எண்ணத்தோடு கொஞ்சமாவதும் குறைகூற இடமில்லை என்பதும் யாவரும் அறிந்ததே உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட இம்மாதிரியான ஒரு பெரிய சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்குமாக கடைபெற ஒரு பத்திரிகையை ஆதரிக்கவேண்டியது நம் கடமை என்பது நாம் சொல்லாமலே விளங்கும். நம்மில் எத்தனையோ லகூதாபதிகள் வருஷம் 1-க்கு லகூக்கணக்கானவர்களும் உள்ளவர்களும் தேசாபிமானமும் சமூகப்பற்றும் சுயமரியாதையில் கவலையுமுள்ளவர்கள் இருக்கும், கவனிக்காமல் இருப்பதென்றால் இச்செல்வங்கள் மற்றதற்காகத்தான் இருப்பதாய்க் கருதுகிறார்களோ தெரியவில்லை.

நிற்க சென்றமாதக் கடைசியில் நாமும் ஸ்ரீமான்கள் பணகால் அரசரும், ராமசாமி முதலியாரவர்களும் திருநெல்வேலி சுற்றுப் பிரயாணத்தில் ஒன்முய் பிரயாணம் செய்த காலத்தில் திராவிடன் பத்திரிகையை நடத்துவது தங்களுக்கு கஷ்டமாய் இருப்பதாகவும் கம்மையே எற்று நடத்தவேண்டும் என்பதாகவும், அப்பத்திரிகைக்கு அச்சு ஆலையும், அச்சு யந்திரமும், அசோசியேட் பிரஸ் வர்த்தமானமும் தாங்கள் கொடுப்பதாகவும் நாம் அதன் நிர்வாகத்தையும் பத்திராதிபர் ஸ்தானமும் எற்று நடத்தவேண்டும் என்றும் மேற்காட்டியவைகள் தவிற மேற்கொண்டு அப்பத்திரிகை நடத்துவதால் எற்படும் கஷ்டங்களை பொது ஜனங்களின் நன்கொடையின் மூலமாக நம்மையே சரிசெய்து கொள்ளவேண்டும் என்றும் சொன்னார்கள். எவ்வளவுக்கெவ்வளவு சுருக்கமாகக் கணக்குபோட்டுப் பார்த்தாலும் 8 பக்கத்திற்குக் குறையாமல் 12 பக்கங்களுக்கு அதிகப்படாமல் இப்போதிருக்கு மளவில் குறைந்தது தினம் 2000 பிரதிகளாவது வெளியவும்படியாகவும், சுமார் மாதம் 1-க்கு 1—4—0 ரூபாய் சந்தாவுக்கு மேல் போகாமலும் கூடுமானவரை பிரசார விஷயத்தோடு வர்த்தமான விஷயமும் தாராளமாய் பிரசுரிக்கப்பட்டு வெளியாவதாயிருந்தால் முதல் வருடத்திற்கு மாதம் 1க்கு 750ரூ போல் நஷ்டம் வரக்கூடுமென்றும் அடுத்த அடுத்த வருஷங்களில் கொஞ்சங்கொஞ்சமாய் தனக்குத்தானே சரிகட்டிக்கொள்ளக் கூடிய நிலைமை வரலாம் என்றும் எதிர்பார்க்கிறோம். ஆகவே இப்போதைப்பற்றி நாம் ஏற்றுக் கொள்வதென்றால் பல வழிகளிலும் பயமாகவே இருக்கிறது. முதலாவது "குடியரசு" பத்திரிகைப்போறாமையுடன் இப்பத்திரிகைப்போறாமையையும் ஏற்பது என்பது சாத்தியமாகக் கூடியதா என்பதும், ஈரோட்டை விட்டு சென்னையில் அதிககாலம் தாமதிப்பது சாத்தி

யமானதென்பதும் இப்போதைப்போல் வாரத்தில் 3, 4 நாள் பிரசாரங்களுக்கு வெளி இடங்களுக்குப் போக சௌகரியம் ஏற்படுமென்பதும், ஆகியவைகள் ஒரு புறமும், இவ்வளவு பெரிய கஷ்டத்தைப் பொதுஜனங்களிடம் நன்கொடைகளால் ஈடு செய்யக் கூடுமென்பது ஒரு புறமும், யோசிக்கவேண்டிய விஷயமாயிருப்பதோடு இத்தொண்டையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகப் பாமரமக்கள் விரும்புகிறார்களா என்பதும் இவ்வாவற்றையும் விட முக்கியமாய் யோசிக்கவேண்டிய விஷயமாகவும் இருக்கிறது. சமீபத்தில் மதுரை ஜில்லா கனவான் ஒருவர் "குடி அரசு" க்காக வருஷம் 2000 ரூபாயும் 3 வருஷத்திற்குக் குறையாமல் கொடுத்துவருவதாக தாமாகவே முன் வந்தார். ஆதலால் சமயம் நாம் இப்போது "குடி அரசு" க்கு இவ்விதமான உதவியில்லை என்றும் "நியூ இண்டியா" வுக்கு உதவுங்கள் என்றும் சொல்லி வந்தோமானால் உடனே அவர் "நியூ இண்டியா" வின் நிலைமையையும் நீங்கள் எடுத்துக் கொண்டு நடத்துவதானால் அதன்படியே கொடுத்துவருகிறேன் என்பதாக வாக்களித்தார். தஞ்சை ஜில்லாவிலும் இரண்டு செல்வம் பொருந்தியவர்கள் "நியூ இண்டியா" வை எடுத்து நடத்துங்கள் என்றும் அதில் ஏற்படும் நஷ்டத்திற்கு ஏதாவது நாங்கள் உதவுகிறோம் என்றும் தாங்களாகவே வாக்களித்தார்கள். இந்த நிலைமையில் என்ன செய்வதென்பது எமக்குத் தோன்றவில்லை ஆகையால் "குடி அரசு" அபிமானிகளும் மற்றும் முழுவதும் கனவான்களுக்கு மையில் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் அதற்கப்படி செய்ய அனுகூலமாயிருக்கும். அல்லது அதை ஆறப்போட்டு செலவை லட்சியம் செய்யாமல் நடத்துவதற்குத் தோன்றியதைத் தெரிவிக்கலாமென்றும் நினைக்கிறேன். அதாவது "நியூ இண்டியா" வும் நின்றுகொண்டு "குடி அரசு" கொள்கைப்படி சரியாக நடத்தலாமா? அல்லது "குடி அரசை" நடத்துவதே போதுமானதா என்கிற விஷயத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன். அடுத்த வாரத்தில் நமது முடிவை தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறோம் ஆதலால் தயவு செய்து உடனே தெரிவிக்கவேண்டுகிறோம்.

இதற்கென்ன பெயர்.

கோயமுத்தூர் நகர பரிபாலன சபையில் பார்ப்பன கவுன்சிலர்களின் துவேஷங்களுடன் உபத்திரவங்களுக்கு ஆளாகி கோயமுத்தூர் முனிசிபல் சேர்மனிடம் பாரமை கொண்ட சில ஆசாமிகளின் விஷமங்களும் கோயமுத்தூர் விஷயங்களை பத்திரிகையில் கவனித்து வருகிறவர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும். இப்போது அதிகாரிகளுக்கு கால் முறிந்து வருவதுடன் அப்பாவி ஆசாமிகளுக்கு நாளுக்கு நாள் புத்திகூடி மயங்கிக்கொண்டு வருகிறதென்றே சொல்லவேண்டியிருக்கிறது. சென்ற வாரத்தில் கோயமுத்தூர் முனிசிபாலிட்டியில் ஒரு பார்ப்பனர் பார்ப்பனரல்லாத சேர்மனைப்பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வந்த விஷயமும், மற்றொரு இடத்தில் பிரஸ்தாபித்திருக்கிறோம். அதாவது சேர்மனுக்கு முனிசிபல் ஆபீஸில் அதிகமான வேலை இருப்பதால் அவர் தனக்கு உள்ள கௌரவ உத்தியோகங்களில் ஏதாவது ஒன்றை ராஜினாமா கொடுத்துவிடவேண்டுமென்ற பொருள் கொண்ட தீர்மானம் கொண்டு வந்தாராம். இத்தீர்மானத்தை ஈரோடு சேர்மன் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச முதலியார் அவர்களாயிருந்தால் காலடியில் போட்டு நசுக்கி இருப்பார். ஸ்ரீமான் பத்தினசபாபதி முதலியாரோ அவ்விதம் செய்யாமல் வேண்டுமென்றே கண்ணியமாய் அதை எற்றுக்கொண்டு விவகாரத்திற்கு விட்டதோடு தானும் அங்கிராசனஸ்தானத்தில் இருந்துமரி தாராளமாய் அங்கத்தினர்கள் பேசவும் தண்டோரில் முற்றுமிருக்கால் எடுத்துக்காட்டவும் இடம் கொடுத்தார். இதைக்கொண்டு வந்தவர்கள் மூடத்துவிதயோக்கியதை உடையவர்கள் என்று சொல்லப்படுபவர்கள். அதாவது படித்தவர் என்பதோடு இரண்டாவது முட்டம் பிராமணர்களென்றும் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் மூன்றுவதுபிராமணர் என்றுமுயர்ந்தஜாதியார்கள் என்றும் சொல்லிக்கொள்ளும் ஆணவமும்படைத்தவர்கள் இத்தீர்மானமானது படித்த அறிவை ஆதாரமாகக்கொண்டதா? அல்லது சட்டத்தை ஆதாரமாகக்கொண்டதா? அல்லது பிராமணத்தன்மையை ஆதாரமாகக்கொண்டதா? என்று பார்த்தால் பார்ப்பனர் பிறவிக்குணம் என்று சொல்ல வேண்டியதல்லால் வேறென்ன சொல்லுவது என்றாகமக்குளிவர்களில்லை. இத்தீர்மானத்துக்கு அங்கிருந்த பார்ப்பனரல்லாதவர்களில் 25 பேர்களில் ஒருவராவது ஆதரிக்கவில்லை. கடைசியாக ஸ்ரீமான் சி. எஸ். சாமபமூர்த்தி அய்யர் என்கிற ஒரு பார்ப்பனர் ஆதரித்தாராம். ஸ்ரீமான் சி. எஸ் சாமபமூர்த்தி அய்யர் என்பவர் கோயமுத்தூர் பார்ப்பனர்களுக்குள் கொஞ்சம் புத்திசாலி என்றும் மற்ற பார்ப்பனர்களைப்போல அவ்வளவு முட்டாள்தனமாய் சக்திக்கொள்வதோ காரியங்களைச் செய்வதோ இல்லாமல் தந்திரமாய் நடந்துகொள்ளக்கூடிய சாமார்த்தியசாலி என்றும்படியாக வாங்கினவர். அப்படிப்பட்டவருக்கும் பார்ப்பனரல்லாதாரிடத்தில் எற்பட்ட துவேஷத்தின் போலையும் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்கிற ஆத்திரமும் அவருடைய அறிவையும் கூட மழுங்கச்செய்து அத்தீர்மானத்தை ஆதரிக்கும்படி செய்துவிட்டதென்றல்லாமற்ற பார்ப்பனர்களால் எவ்வளவு உபத்திரவம் நடந்துகொண்டிருக்குமென்பதை வாசகர்களே கவனிக்கவேண்டும் அல்லாமலும் இந்தத் தீர்மானத்தில் வேறும் குறும்பு இல்லாமல் வேறு ஏதாவது கண்ணியமான கருத்து அடங்கி இருக்கிறதா? இதற்குப் பார்ப்பனர்களின் துவேஷமும உபத்திரவமுமென்றும் சொல்வதல்லாமல் வேறு எனன பெயர் இடுவது? ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியாருக்குசட்டசபை மெம்பர் வேலையோ ஜில்லா போர்டு தலைவர் வேலையோ வைத்து இருப்பதானால் முனிசிபல் சேர்மனுக்கு லாயக்கில்லையென்று சொல்வதானால் மற்றவர்களின் யோக்கியதையை அவரவர்களே பரிசித்துப்பார்க்கட்டும். ஸ்ரீமான் [illegible]

பாட்டுக்கு தாராளமாக அவருடைய பெரியவர்கள் சம்பாதித்து வைத்துவிட்டுப்போயிருக்கிறார்கள். இம்மாதிரியான பொதுக்காரியம் தவிர அவருக்கு வேறு ஒரு வேலையும் இதுசமயம் இல்லை அதாவது விவசாயமோ, வியாபாரமோ வக்கீல் பிழைப்போ ஆகிய இதுகளில் பணம் சம்பாதிக்க வேண்டுமென்கிற ஒரு தொந்திரவும் கிடையாது. இவருக்கே இவ்வேலைகள் லாயக்கில்லையென்று சொல்வதானால் அன்றுடகம் பலர் குடியைக் கொடுத்தாலொழிய ஜீவனமில்லை சொக்காயில்லை தலைப்பாகையில்லை வீட்டுவாடகைக்கு மார்க்கமில்லை மற்றும் 12 மணி தொழும் தங்கள் வயிற்றுப் பாட்டிற்கே ஆணபமற்ற வழியில் உழைக்க வேண்டியவர்களும் தங்களது அறிவு கல்வி தேசம் முழுவதையும் அன்னியருக்கு விற்று ஜீவிக்கிறவர்களுக்கு லாயக்குண்டா? என்பதையும், அவர்கள்வசம் பொதுக்காரியத்தை ஒப்புவிப்பது இடைவிடல்லதா? என்பதையும் வாசகர்களே யோசித்து பார்க்கட்டும். ஆனால் இவற்றையெல்லாம் வண்மை விவாதத்தின் பேரால் தமற்றவண்மைகள் நன்றாய் எடுத்துக்காட்டி புதிலருப்படி செய்திருக்கிறதாக பத்திரிகையில் பார்த்தோம். ஆனாலும், பார்ப்பனரல்லாதாருக்கு எங்கே பாவது கொஞ்சம் ஆதிக்கம் இருந்தால் அவ்விஷயத்தில் இவ்வளவு அக்கிரமமாகவும் யோக்கியப் பொறுப்பற்ற தனமாகவும் ஒவ்வொரு பார்ப்பனரும் கடந்துகொண்டு அதை ஒழிக்கப்பார்ப்பதும் இதை பார்வது கண்டதால் இது பார்ப்பனதுவேஷம் என்று சொல்லுவதுமானால் இதன் அர்த்தமென்ன? ஸ்ரீமான் சாமபமூர்த்தி அய்யரைப் போல் பொறுப்பும் யோக்கியதையும் புதிதியும் உள்ளதாக கருதப்படும் பார்ப்பனர்கள் இவ்விதக் குறைவான காரியங்களை கண்டபோதாமலும் தலையிடுவதாலுந்தான் புதிதி சொல்லி இருசமூகத்திற்கு ஒற்றுமை ஏற்படுவதற்கு வேண்டிய காரியங்கள் செய்ய வேண்டிய நிருக்க அதை மறக்கடிக்கும். இதில் சரி பங்கு எடுத்துக்கொள்வதானால் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமைக்கும், பார்ப்பனருக்கும் இடம் எங்கே இருக்கிறது என்று கேட்கிறோம்? தஞ்சை ஜில்லா போர்டு பிரஸிடெண்டும் ஒரு யோக்கியமான பார்ப்பனரல்லாதாராயிருப்பதால் அவரையும் அங்கு இரண்டு பார்ப்பனர்கள் இது போல வேலைகொடுமை செய்து வருகிறார்கள். பார்ப்பனப்பத்திரிகை ஆணவமானது இவற்றற்குத்தியாயிருக்கிறது. சேர்மனின் அக்கிரமங்களைக் கண்டிக்க ஒவ்வொரு கவுன்சிலருக்கும் ஒவ்வொரு வோட்டருக்கும்வரி கொடுப்போருக்கும் உரிமையுண்டு. அதை நாம் ஒரு குற்றமும் ஆக்ஷேபிக்க வில்லை. பார்ப்பனரல்லாதார் என்கிற காரணத்திற்காக விட்டுவிடுமடியும் நாம் சொல்லவில்லை. நன்றாக யோக்கியமான வழியில் கண்டிக்கட்டும். ஆனால் சேர்மனுக்கு இத்தனை கவரவம் கூடாதென்றும் சொல்வதும் இவர் கூடாது என்று சொல்லுவதும் எவ்வளவு அல்பத்தனமும் கெட்ட எண்ணமும் என்பதை நமது கேள்வி

ಕಾಡಂಚಿನ ಗ್ರಾಮಗಳಲ್ಲಿ ಆನೆ ದಾಳಿ ತಡೆಗೆ ಕ್ರಮ

ಅರಣ್ಯ ಸಚಿವ ಈಶ್ವರ ಖಂಡ್ರೆ ಭರವಸೆ

ಬೆಂಗಳೂರು, ಫೆ. 26– ಕಾಡಂಚಿನ ಗ್ರಾಮಗಳಲ್ಲಿ ಆನೆ ದಾಳಿ ತಡೆಗೆ ಕ್ರಮ ಕೈಗೊಳ್ಳಲಾಗುವುದು ಎಂದು ಅರಣ್ಯ ಸಚಿವ ಈಶ್ವರ ಖಂಡ್ರೆ ಭರವಸೆ ನೀಡಿದರು.

ಬುಧವಾರ ವಿಧಾನಸಭೆಯಲ್ಲಿ ಪ್ರಶ್ನೋತ್ತರ ವೇಳೆಯಲ್ಲಿ ಶಾಸಕ ಎಚ್.ಡಿ. ತಮ್ಮಯ್ಯ ಅವರು ಆನೆ ದಾಳಿಯಿಂದ ಬೆಳೆ ನಷ್ಟ ಹಾಗೂ ಸಾವು ಸಂಭವಿಸಿದಾಗ ಪರಿಹಾರ ನೀಡಲು ಆಗುತ್ತಿರುವ ವಿಳಂಬದ ಬಗ್ಗೆ ಪ್ರಸ್ತಾಪಿಸಿದರು.

ಸಚಿವರು ಉತ್ತರಿಸಿ, ಆನೆ ದಾಳಿಯಿಂದ ಸಾವು ಸಂಭವಿಸಿದಾಗ ಪರಿಹಾರ ನೀಡಲು ಆಗುತ್ತಿರುವ ವಿಳಂಬದ ಬಗ್ಗೆ ಪರಿಶೀಲಿಸಲಾಗುವುದು. ಆನೆ ದಾಳಿಯಿಂದ ಬೆಳೆ ನಷ್ಟ

கோயமுத்தூர் நகர பரிபாலன சபையில் பார்ப்பனக் குறும்பு.

—o—

கோயமுத்தூர் நகரபரிபாலன சபையில் மொத்தம் 32 கவுன்சிலர்களிருந்து வருகின்றனர். அதில் இரண்டு பார்ப்பனர்கள்தான் கவுன்சிலர் ஸ்தானம் பெற்றிருக்கின்றனர். அதில் ஒருவர்பழையகவுன்சிலர். இன்னொருவர் இரண்டு மாதத்தின்போது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் கே. ராமசாமி அய்யர் என்னும் பார்ப்பனர் ஓர் வாலிப வக்கீல்தார். இவர் கவுன்சிலுக்கு வந்ததும் தமது வக்கீல் சாமர்த்தியத்தைக்காட்ட ஆரம்பித்து ஆழம் தெரியாது கால்விட்டுக் கொண்டு ஆப்பசைத்து மாட்டிக்கொண்ட குரங்கு போல் விழிக்க நேர்ந்துவிட்டது. அதாவது 24-2-27 தேதிசேர்மன் ஸ்ரீமான் சி. எஸ் இரத்தினசபாபதி முதலியாரவர்கள் தலைமையின் கீழ் நகரபரிபாலன சபையின் கவுன்சில் மீட்டிங்கு ஒன்றுநடந்தது. அன்று கூட்டத்திற்கு வரத்தவறிய ஐந்து கவுன்சிலர்கள் போக 27 கவுன்சிலர்கள் வந்திருந்தனர். அன்று ஸ்ரீமான் கே. ராமசாமி அய்யர் என்ற புது பார்ப்பனக்கவுன்சிலர் சட்டப்படியும் ரூல்ஸ்படியும் கவுன்சிலர் ஆலோசனைக்குக் கொண்டுவரக்கூடாததான ஒரு தீர்மானத்தை கவுன்சில் ஆலோசனைக்குக்கொண்டுவந்தார். தீர்மானமே சேர்மன் அவர்களைப் பொறுத்திருந்ததால் சேர்மன் அவர்கள் எழுந்து விஷயம் தம்மைப் பொறுத்ததாயிருப்பதால் தாம் தலைமையிலிருந்து விலகிக்கொள்வதாயும் வைஸ் சேர்மன் ஸ்ரீமான் கே. அருணாசலம் செட்டியாரவர்கள் தலைமை வகிக்கவேண்டுமென்றும் சொல்லி விட்டார். உடனே வைஸ் சேர்மன் அருணாசலம் செட்டியாரவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். ஸ்ரீமான் கே ராமசாமி அய்யரவர்கள் அடியிற்கண்ட அபிப்பிராய மடங்கிய ஒரு தீர்மானத்தைப் பிரேரேபணை செய்தார் அதாவது:—

"கோயமுத்தூர் நகரபரிபாலன சபையில் வாட்டர் வொர்க்ஸ் முதலிய வேலைகள் காலுக்கு நாள் விரிவாகி வருவதால்சேர்மன் அவர்கள் முனிசிபல் நிர்வாகத்தில் தமது பூராக்கவனத்தையும் செலுத்த சேர்மன் ஸ்தானத்தையும் அவசியமானால் சட்டசபை ஸ்தர்னத்தையும் மாத்திரம்வைத்துக் கொள்ளும்படி (டிஸ்ட்ரிக்டு போர்டு பிரசிடெண்டு முதலிய ஸ்தானங்களை விட்டுவிடும்படி) சேர்மன் அவர்களை இந்தகவுன்சில் கேட்டுக் கொள்கிறது."

என்ற தீர்மானத்தைப் பிரேரேபித்து கோவை நகரபரிபாலனசபையில் ஒவ்வொரு மீட்டிங்கிலும் வசூலாகாத வரிகள் அதிகமாகத்தள்ளுபடி செய்து வருகிறதென்றும், இப்பொழுதே இப்படியிருந்தால் தண்ணீர் வரிவசூல் முதலிய வேலைகள் இனி அதிகமாகவரும் போது வசூலாகவாகதொகைகள் இன்னும் அதிகம் தள்ளுபடி செய்யவேண்டிவருமென்றும் சேர்மன் அவர்கள் தமது பூராநேரத்தையும் நகரபரிபாலன சபைவிஷயத்திலேயே செலுத்தினால் நிர்வாகம் சரிவர நடக்குமென்றும் குறிப்பிட்டுப் பேசி ஜில்லாபோர்டு தலைவர் பதவியை விட்டுவிட வேண்டும் என்று சொல்லாமற் சொல்லுதல் என்றமுறையில் தனது விஷத்தைக்கக்கி விட்டு உட்கார்ந்தார். கொஞ்ச நேரம்வரை தீர்மானத்தை ஆமோதிப்பாரில்லை. வைஸ் சேர்மனவர்கள் ஆமோதிப்பவருண்டாஎனக் கேட்டார் ஐயோ பாவம்! என்ன செய்வார் ஒரு பார்ப்பனர் கொண்டு வந்த தீர்மானம் ஆமோதிப்பாரில்லாமற் போயிற்று என்று பழிச்சொல்வருமே என்று, ஜாதியபிமானம் சந்நியாசியையும் விடாதல்லவா? ஸ்ரீமான் சி. எஸ். சாம்பமூர்த்தி அய்யர் என்ற பார்ப்பனக் கவுன்சிலர் எழுந்து ஆமோதிக்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து விட்டார். இந்த இரண்டு பார்ப்பனரின் சூழ்ச்சியாக் கவனித்த மற்றைய கவுன்சிலர்களுள் பரபரப்பேற்பட்டது. ஒவ்வொருவராக எழுந்தார்கள் இரு பார்ப்பனர்களின் விஷயத்தையும் சரியானபடிகண்டித்துப் பேசினார்கள். முதலில் ஸ்ரீமான் முத்துசாமி பிள்ளையவர்கள் எழுந்து இத்தீர்மானம் சரியான தீர்மானமல்லவென்றும், இதுபார்ப்பனர்களின் வக்கில் சூழ்ச்சியால் கொண்டு வந்த தீர்மானமென்றும் தீர்மானம்கொண்டு வந்தவர் தீர்மானத்தை வாப்சுவாங்கித்தமது கவுரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்றும் மிகவும்அழுத்தமாகக்கண்டித்துப் பேசினார். ஸ்ரீமான் ஈப்பன் துரை அவர்கள் எழுந்து சேமன் அவர்கள் முனிசிபல் சேர்மன் ஸ்தானத்திற்கு வந்தபின் நகரம்அடைந்திருகும்அபிவிருத்தியையும் இவருக்குமுன் இருந்த நிலைமையையும் சேர்மன் முதலியாரவர்கள் சொந்த வேலை யென்பதையே கவனிக்காது எப்பொழுது பார்த்தாலும் முனிசிபல் நிர்வாகத்திலேயே தனது கவனத்தைச்செலுத்தி அவருக்கு முனிசிபல் நிர்வாகமே ஒரு பைத்தியமாக ஏற்பட்டிருக்கிற தென்றும் பேசினார். பின் ஸ்ரீமான் ஆர். வீரையன் அவர்களும் சேர்மன் அவர்களின் நிர்வாகத்திறமையைப்புகழ்ந்து பேசினார். அதன் பின் ஸ்ரீமான்கள் நஞ்சுண்டகவுண்டர், வி. எஸ் செங்கோட்டையா, ஷண்முகசுந்தரம் பிள்ளை முதலிய கவுன்சிலர்கள் எல்லோரும் பார்ப்பனர்களின் தீர்மானத்தைக்கண்டித்தும் ஸ்ரீமான் சேர்மன் முதலியாரவர்கள் முனிசிபல் நிர்வாகத்திறமையைப்புகழ்ந்து இருபார்ப்பனரின் விஷப்பல் முறியப் பேசினார்கள். ஸ்ரீமான் பழனியப்பட செட்டியாரவர்கள் சேர்மன் அவர்களின் முனிசிபல் நிர்வாகத்திறத்தை இந்தக்கவுன்சில் பாராட்டுகிறதென்கிற அபிப்பிராய மடங்கிய ஒரு திருத்தப்பிரேரேபணை கொண்டு வந்தார். வைஸ்சேர்மன் அவர்கள் பழனிச்சாமி செட்டியாரவர்கள் தீர்மானம் திருத்தத்தீர்மானமாகாதென்றும் வேண்டுமானால் தனித்தீர்மானம் கொண்டு வரலாமென்றும் சொல்லிவிட்டார்.

கடைசியாக அசல்தீர்மானம் கொண்டு வந்த ஸ்ரீமான் கே. ராமசாமி அய்யர் என்ற பார்ப்பனர் என்ன செய்வார் பாவம், எடுத்ததற்கெல்லாம் குடுமிபிடிப்பது எட்டாவிட்டால்காலைப் பிடிப்பது பார்ப்பனரின் ஜென்மக்குணமல்லவா? உடனே எழுந்து தன் நிலையறியாது தானும் சேர்மன் அவர்களைப்பற்றி புகழ்ந்து பேசஆரம்பித்து விட்டார். எல்லாக்கவுன்சிலர்களும் தன்னைக்கண்டித்ததைப்பார்த்தால் தான் ஏதோ சேர்மன் அவர்களைக்குறை கூற தீர்மானம் கொண்டுவந்ததாக நினைத்து விட்டார்களென்றும் தாம் குறைகூறவில்லையென்றும் நாளுக்கு நாள் முனிசிபல் நிர்வாக வேலை அதிகப்படுவதால் சேர்மன் அவர்கள் ஒரே வேலையைக்கவனித்தால் இதைக்காட்டிலும் இன்னுங்கொஞ்சம் நிர்வாகம் நல்ல நிலையடையுமென்றும், இபபோதிருக்கும் நிலைமையையும் நான் குறைகூறவில்லையென்றும் சொல்லி தனதுதீர்மானத்தைவாப்பீஸ் வாங்கிக்கொண்டார். அசல தீர்மான கர்த்தாவின் கதி இவ்வாறுனபின் ஆமோதித்த பார்ப்பனர் ஸ்ரீமான் சாம்பமூர்த்தியய்யர் எழுந்தார்; அவர் வக்கீல் சாமர்த்தியத்தை உபயோகபடுத்தநிக் குப் புற விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை என்பதுபோல், தாம் தீர்மானத்தை ஆமோதித்தகாரணம் கனம் சேர்மன் அவர்களைக்குறைகூற எண்ணியதல்லவென்றும் தாம் ஆமோதிக்திருக்காவிட்டால் தீர்மானம் தள்ளுபட்டுப்போயிருக்குமென்றும் தீர்மானம் தள்ளுபட்டுப் போயிருந்தால் சேர்மன் அவர்களின முனிசிபல் நிர்வாகத்நிறமையைப்பற்றி இத்தனை கவுன்சிலர் பேச சந்தர்ப்பம் கிடைத்திருக்காதென்றும் தாம் ஆமோதித்ததால் தான் சேர்மன் அவர்களைப்பற்றி எல்லோரும் புகழ்ந்து பேச சந்தர்ப்பம் கிடைத்ததென்றும் இச்சந்தர்ப்பத்தை உண்டுபண்ணவே தீர்மானத்தை ஆமோதித்ததாகவும் தமது வக்கில் சமர்த்தியத்தை உபயோகித்துப் பேசினார் (வாசகர்களே! இது தான்பார்ப்பனத்தந்திரம்).

கடைசியாக ஸ்ரீமான் சேர்மன் முதலியாரவர்கள் எழுந்து தாம்சேர்மன்ஸ்தானத்திற்கு வருவதற்குமுன் 40 ஆயிரம் ரூபாய் வீட்டுவரி வசூலான காலத்தில் 100-க்கு 19 பர்சண்டு வசூலாகமல் தள்ளுபடி செய்யப்பட்டு வந்திருக்கிறதென்றும் இப்போது லட்ச ரூபாய் வசூலாகவேண்டியிருந்தும் 100-க்கு 14 பர்சண்டு தான் தள்ளுபடி செய்யப்பட்டு வந்திருக்கிறதென்றும், வசூலிலாகா சிப்பந்திசெலவும் முன்னிருந்தவர்கள் செலவு செய்ததைக்காட்டிலும் இப்போது 100-க்கு 2 பர்சண்டு கம்மிதான் செய்யப்பட்டுவருகிறதென்றும் ஸ்ரீமான் கே. ராமசாமி அய்யரின் தீர்மானத்திற்கு ஆதாரமில்லையென்றும் வேறு தீர்மானத்தைத்தாமே தள்ளியிருக்கலாமாயினும் தம்மை பொறுத்திருப்பதால் கவுன்சிலர்களின் ஆலோசனைக்கு விட நேர்ந்ததென்றும் விளக்கமாகப் பேசி உட்கார்ந்தார். இதனை ஆசீர்வாதமும் பெற்ற பார்ப்பனர் அப்பொழுதுதான் அறுக்கப்பட்ட விதவை போல்முகவாடிட்டு வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள்.

கண்ணற்கண்டோன்.

பார்ப்பனப்புரோகிதம் ஒழிந்தது!

பார்ப்பன "குருமாருக்கு" கோடித்து வந்த வரியும் ஒழிந்தது!

மதுரை பிராமணரல்லாத மகாநாட்டில் தோன்றிய தீர்மானங்களை நம் சகோதரர்கள் செய்கையில் நடத்தி வருவதை நம் "நாயிடன்" "குடி அரசு" ப்பத்திரிகை முன் வாயிலால் அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். சிற்ப நம் மதுரை நாட்டிற்கு உபகாரியுமாயும் வினவி நமதது அல்லும் பகலும் உழைத்தவருமான திருவாளர் டி. கொண்டல் நாயுடு அவர்கள் அண்ணையார் விண்ணவர்கு விருந்தாயது பற்றி 19—2—27 தேதி குண்ணத்தூரில் நமது இலத்தில் சடங்குக்கிரியைகள் நடை பெற்றன. இக்கிரியைகளுக்கு மதுரையினின்று திருவாளர்கள் ஐகோர்ட்டு வக்கீல் பி. ரங்கசாமி நாயுடு அவர்கள் பி ஏ. பி. எல்., எல். கூடலிங்கம் பிள்ளை அவர்கள், பெஞ்ச் கோர்ட்டு மாஜிஸ்திரேட் சின்னசாமி ராஜா அவர்கள், பெண்ஷன் பட்டணம் சுப்பேதார் சுப்பா நாயுடு அவர்கள், ஜவுளி வியாபாரம் சின்னச்சாமி நாயுடு அவர்கள், குத்தூர் சின்னசாமி நாயுடு அவர்கள், நிலச்சுவான்தார்கள் அ கு. சினிவாசலு நாயுடு அவர்கள் அ கு. அக்கையசாமி நாயுடு அவர்கள் மற்றும் இராமக்களினின்று அநேக நில வனமுடையோர்களும் சுமார் 750 பேர்கள்வரை காணப்பட்டனர். திருகொண்டல் நாயுடு அவர்கள் பிறப்பிடம், திருமங்கலம் தாலூகா குண்ணத்தூர் பரம்பரையான பெருங் குடும்பத்திற் பிறந்தவர்; நிலச்சுவான்தார். இவருக்கு இக்காட்டில் மிக்க செல்வாக்குண்டு; இச் சீரியருடன் பிறந்தார் இவருடன் நால்வர். அவர்கள் வைணவமதத்தில் சாலவும் பற்றுடையவர்கள். அவர்களும் இவருடைய விருப்பத்திற் கிணங்கி பிராமணரைப் புறக்கணித்துத் தம் அண்ணையாரின் கிரியைகளைச்செவ்வனே நடத்தியதுடன் வந்திருந்த எளையோர்நம் இதனை பேபின் பற்றவதாக வாக்குறுதி கொடுத்தார்கள். அத்துடன் ஸ்ரீரங்கம் அண்ணாவார்சுவாமி குருக்களுக்கு வரி கொடுப்பதை நிறுத்துதல் செய்யவேண்டுமென தீர்மானித்தபின் வந்திருந்தகாரணவரும் உணவுண்டு தாம்பூலம் பெற்றுச் சென்றார்கள் என்று ஒரு திருபர் வரைகிறார்.

குறிப்பு:-மதுரைமஹாநாட்டின் தீர்மானத்தை யெட்டி குண்ணத்தூர் ஸ்ரீமான் கொண்டல் நாயுடுகாரவர்கள் தமது அண்ணையாரின் இறுதிக்கிரியைகளை பார்ப்பனீய சம்பந்தமின்றி சிறப்பாக நடத்தியது பாராட்டத்தக்கது. இதோடு மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தி யென்னவென்றால் தங்கள் மாபுக்கு பரம்பரை ஆச்சாரியர் என்று பேர் வைத்துக கொண்டு வரும் வம்சவழி வந்த ஸ்ரீரங்கம் ஸ்ரீ அண்ணங்கார் ஸ்வாமிகளுக்கு குரு தக்ஷிணைக்கை கொடுத்தல் கூடாது என்று அன்று தீர்மானஞ் செய்து கொண்டமையேயாம் ஸ்ரீமான் அண்ணங்கார் ஸ்வாமிகள் பிராமணர் ஆதலால் கொடுத்தல் கூடாது என்பதற்காக நாம் மகிழ்ச்சிகொள்ளவில்லை. ஆச்சாரியர்கள் என்று பேர்வைத்துக்கொண்டு அணுவளவேனும் கலனல்லாவிட்டாலும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையை விட வேரோடு அறுப்பதாயை காரியங்களுக்கு அடிபணிந்து பொருள் கொடுக்கும் ஈனத்தனம ஒட்டமெடுக்குங்காலும் ஆரம்பமாகிவிட்டதற்காகவே மகிழ்ச்சியடைகின்றோம். இந்தப் பார்ப்பனர் ஆண்டுதோறும் பிள்ளைக்குக்கலியாணம் பெண்ணுக்குச் சாந்தி முகூர்த்தம், வீடு இடிந்து விட்டது என்பதாக ஏதாவதொரு சாக்குச்சொல்லிக்கொண்டு கிராமங்களுக்கு வந்து பணங்கொடுக்காவிட்டால் சாபங்கொடுத்து விடுவேன் என்று பாமர மக்களை மிரட்டிக் கொள்ளையடித்துக்கொண்டு போவதைத்தவிர இவர்கள் சாதிப்பதொன்று மில்லை. பாங்கில் காரியம் பார்க்கும் ஒரு ஐயங்காரும் காபி கிளப் வைத்து எச்சில் பாத்திரம் கழுவும் ஒரு ஐயங்காரும், கோயமுத்தூர் ஜில்லாவில் கம்மவார் வசிக்கும் கிராமங்களில் அவாதசாமத்தோடும் பாதகுறட்டோடும் ஆசாரிய வேடம் பூண்டு வந்தமை யாமறிவோம். ஆதலால் இத்தகையோர்களுக்கு நாம் என் பொருள் கொடுத்து காலில் வீழ்ந்து சுயமரியாதை யை கட்ட அடிமைகளாகவேண்டும்? ஸ்ரீமான் கொண்டல் நாயுடுகாரவர்கள் செய்த இச்சுயமரியாதைத் தீர்மானத்தை மற்றப் பார்ப்பனரல்லாதாரும் கடைப்பிடித்தொழுகுவாராக. ப—ர

முன்னேற்றப்பாட்டு.

படிமிதை முந்திய பைந்தமிழ் மாந்தர்கள்!
அடிமை நீங்குமின் அறைவது கேண்மின்!
சிறப்பால் அறிவால் செய்கையால் அன்றிப்
பிறப்பால் ஜாதி பேதமொன்றின்று.
தந்நலங் கருதித் தாங்கள் உயரவே
என்னவோ பலபல இருக்கசர் சாமம்
அதர்வணமென்ன ஆக்கினர் அவற்றுள்
எதனையுஞ் சரியென ஏற்பதற் கில்லை.
வேதக்கதையை விரிப்போ மானுல்
பேதம் அதைவிடப் பேசுதற் கில்லை.
ஒரு தாய் வயிற்றில் உதித்த நமக்குள்
பெரிதாய் வேற்றுமை பேசி வகுத்தனர்.
வகுத்த பல பல வகுப்பினை நம்மிலும்
மிகத்தவர் தாமென மினுக்கியுங் கொண்டனர்
அவற்றையும் நம்பி அறியாது நாமும
எவற்றுக்கும் மேலாம் இயற்கை இழந்தனம்.
இனந்தான் ஜாதி இத்தனை யாதற்கு
மனந்தான் காரணம் மற்றொன்றிலையால்
எதாவ தொன்றை எடுத்தேங்குரிய
உதாரணமாக உரைத்தலுங் கூடும்.
பட்டர் என்னப் படுபவர் நம்மவர்
கட்டிய கோவிலில் காவல் காப்பவர்
ஆதி சைவர்நம் ஆலயம் புகுந்து
வேதியராகி விளங்கு கின்றனர்.
பார்ப்பனர் அவரைப் பார்ப்பன ரெனவே
ஈர்ப்பாராயினும் இன்று வரையிலும்
கொள்ளன கொடுப்பன கோலந கண்டிலர்
விள்ளன இனிமேல் விவாகமும் அவர்க்குள்
கடப்பன காலம் கடக்குங் காலே
நடப்பனவாதி நாம் கண்டிடுவோர்.
நம்முள் வேற்றுமை நாமொழித் திடலே
தம்முள் வேற்றுமை தாமொழித் திடுவர்.
மெய்மை இவற்றை வினம்புகின் றமையால்
வைகின்றனரெமை ஈய் கொண்ட மட்டிலும்.
பற்பல புகல்வதென் பார்ப்பனர் சில்லோர்
அற்ப னிவனென்ன அருவருக் கின்றனர்.
அற்பனும் அறிஞனும் அவரவா மனத்தொரு
கற்பனை யன்றிக் கண்ட தொன் றில்லை.
மறையோன் என்பான் மருவிய உடலும்
பறையோன் என்பான் பரவிய உடலும்
சுடலையிற் கொடுபோய்ச் சுடுமின் தெரியும்
மடமையிற் கிடந்து, மருண்டது போதும்
இனி இகை விடுமின்! ஏகமாய்க் கூடுமின்!
மனிதப்பிறவியில் மற்றெரு
பேதமின்றெனப் பேணுவம் யாமே!

பண்டித நா கிருஷ்ணசாமி நாயுடு, மதுரை.

மதுரை அமெரிக்கன் காலேஜ் மாணவர்களுக்குள் சுயமரியாதை உதயம்.

சென்ற வாரம் சென்னை பச்சையப்பா ஆஸ்ட்டலில் பார்ப்பனரல்லாத வாலிபர்கள் தங்களுக்கு பார்ப்பனரல்லாத சமையல்காரரையே வைத்து சமையல் செய்து சாப்பிட்டுவருவதும் அதன் காரணங்களையும் எழுதி மற்ற காலேஜ் பார்ப்பனரல்லாத பிள்ளைகளும் இந்த பின் பற்றவேண்டும் என்று வேண்டிக்கொண்டோம். அதற்கு இணங்க இவ்வாரம் மதுரை அமெரிக்கன் காலேஜிலுள்ள பார்ப்பனரல்லாத பிள்ளைகளும் தங்களுக்குள் பார்ப்பன சமையல்காரரைத் தள்ளிவிட்டு பார்ப்பனரல்லாத சமயல்காரரை வைத்து சமைத்து சாப்பிடுவதுடன் வகுப்பு வித்தியாசமில்லாமல் தங்களுடன் கூட உட்கார்ந்து சாப்பிட சம்மதிக்கும் மாணவர்களெல்லாம் சேர்த்து ஒன்றுப் உட்கார்ந்துசாப்பிடத்தீர்மானித்து அந்தப்படி நடத்தி வருகிறார்கள் என்பதைக் கேட்கமிகவும் சந்தோஷமடைகிறோம்

மதுரை காலேஜில் இப்படி நேர்ந்ததற்கு ஒரு தகுந்த காரணமும்சொல்லப்பட்டது. அதாவது அக்காலேஜ் மாணவர்களில் இரண்டொரு பார்ப்பன மாணவர்களுக்கும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கும் மிகவும்நேசமாய் இருந்தாடு மாமச உணவு முதல் கொண்டு வித்தியாசமில்லாமல் ஒன்றுப் உட்கார்ந்து சாப்பிட்டு வருவது வழக்கமாயிருந்து வந்தது. சமீபத்தில் ஒரு நாள் அக்காலேஜ் மாணவர்கள் சிலர்கூடி ஒரு சமபந்தி போஜனம் ஒன்று நடத்தினர்கள். இதற்கு முன் சொன்ன அதாவது மாமிசம் சாப்பிட்டுக்கொண்டிருந்த பார்ப்பன வாலிபர்களையும் அழைக்கப்பட்டதாம்; அவர்கள் பார்ப்பனரல்லாதாருடன் கலந்து உட்கார்ந்துசாப்பிட மறுத்துவிட்டார்களாம். இதன் பேரில் மற்ற பார்ப்பனரல்லாத பிள்ளைகளுக்கும் சுயமரியாதை உதயமாகி இனி பார்ப்பன சமயல்காரர் சமைக்க சாப்பிடுவதில்லை என்றும் தங்களுக்குள் எல்லோரும் ஒன்றுப் இருந்து சாப்பிடுவதென்றும் தீர்மானித்துக்கொண்டார்களாம். ஆகவே எப்படியாவது மக்களுக்கு சுயமரியாதை உதயமாவதைப்பார்த்து சந்தோஷமடைகிறோம். இனி மற்ற ஹாஸ்டல் மாணவர்கள் எப்போது பின்பற்று வார்களோ?

ஒப்பிலியனூர் முத்தமிழ்ச் சங்கத்தின் முன்றவது ஆண்டு நிறைவுவிழா:—இக்கழும் மார்ச்சுமீ 6உ ஞாயிற்றுக்கிழமை சென்னை "நவசக்தி" ஆசிரியர் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையின்கீழ் ஷை விழா நடைபெறும். அவ்வமயம் திருவாளர்கள் திருச்சி அ. சரவண முதலியார், எஸ். பழனியப்பன், சி. கே. சுப்பிரமணிய முதலியார் பி. ஏ., வேதாந்த பாலபாஸ்கரன் ம. ரா. குமாசாமி பிள்ளை முறையே "அன்பின்" உரு "உத்யோகவித்தியாசம்" "இசபாம்" "உலகரகியம்" "எட்டுஉதெட்டு" என்ற பொருள்கள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் என்று சங்கத் தலைவர் திருவாளர் மு. மயில்சாமி அறிவித்திருர்.

(4ம் பக்கத் தொடர்ச்சி.)

வைந்து அவர்களோ இந்த இலாகாவில் தலையிடாமல் செய்யமுடியாதா" என்பதாகிற இதுகள்தான் வேண்டுகோளா யிருக்கிறதே தவிர வேறென்ன என்பது யோக்கியர்களுக்கு விளங்காமல் போகாது.

கோர்ட்டுகள் அதிகமாவதினாலே வழக்குகள் அதிகமாகிறது.

எத்தனைக்கெத்தனை கோர்ட்டுகள் அதிகமாய் வைக்கிறார்களோ அத்தனைக்கத்தனை வழக்குகள் உற்பத்தியாகிக்கொண்டே இருக்கிறது. இதனால் வழக்குகளும் விவகாரங்களும் உற்பத்தியாவதற்கு கோர்ட்டுகளே காரணமல்லாமல் வேறென்ன? உதாரணம் வேண்டுமென்றால் கள்ளுக்கடைகளையும் தாசி வீடுகளையும் மோட்டார் வசதிகளையும் பார்த்தால் கண்ணாய் விளங்கும். நாம் ஏன் கள்ளுக்கடைகளை குறைக்கும்படி சர்க்காரை வேண்டுகிறோம்? கடை குறைந்தால் குடிகாரரின் எண்ணிக்கையும் குடிக்கும் அளவும் குறையும் என்றுதானே கவிற வேறென்ன? நாலு தாசிகள் இருக்கும் ஊரில் நடக்கும் விபசாரத்தைத்தான் 40 தாசிகளிருக்கும் ஊரில் விபசாரித்தனத்துக்கும் கணக்குப்பார்த்தால் அதிக தாசிகள் உள்ள ஊர்களில் விபசாரித்தனம் செய்கிற ஆள்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருக்குமா அல்லவா? அதுபோலவே ஒரு ஊருக்கு ஒரு தரம் போய்வரும் போக்குவரத்து வசதிகளுக்குப் பதிலாக நான்குதரம் போய் வரும்படி போக்குவரத்து வசதி ஏற்படுத்தினால் அதற்கேற்ற பிரயாணிகள் அதிகமாக ஏறுபடுவார்களா இல்லையா? அதுபோலவே கோர்ட்டுகள் அதிகமாகவும் ஊர் ஊராகவும் ஏற்பாடு செய்தால் விவகாரம் வளர்ந்து கொண்டேதான் இருக்கும்.

பழைய நிலைமையும் புதிய நிலைமையும்.

ஆதியில் கோயமுத்தூர் ஜில்லாவுக்கு இரண்டு முன்சீப் கோர்ட்டுகளும் ஒரு ஜட்ஜி கோர்ட்டும்தான் இருந்தன. இப்போது கொள்ளேகாலம் உட்பட 8 முன்சீப் கோர்ட்டுகளும் 3 சப் ஜட்ஜி கோர்ட்டுகளும் இருக்கின்றன. இரண்டு ஜில்லா கோர்ட்டும் இருக்கின்றன. இவ்வளவும் போதாமல் இனியும் ஒரு சப் ஜட்ஜி வேண்டுமென்று பலரும், இனியும் ஒரு ஜில்லா கோர்ட்டு வேண்டுமென்று பலரும் விரும்புகிறார்கள். (யாவர்? வக்கீல் கூட்டத்தார்.)

கோர்ட்டுக்கு அவசியமுண்டா?

இதிலிருந்து நாம் அறியவேண்டிய தென்ன? இவ்வளவு நீதி ஸ்தலங்கள் ஏற்படும்படியான அளவுக்கு இந்த ஜில்லாவில் சென்ற 40, 50 வருஷத்தில் ஜனத்தொகை பெருகிவிட்டதா? அல்லது இவ்வளவு கோர்ட்டுகள் ஏற்படும்படி ஜனங்கள் அவ்வளவு அயோக்கியர்களாகி விட்டார்களா? என்று பார்த்தால் ஜனத்தொகை ஏறக்குறைய முன் இருந்த அளவுக்கு 4-ல் ஒரு பாகம்தான் அதிகமாகி இருக்கிறது. இந்த அளவுக்கு சுமார் 1/4 (கால்) முன்சீப் கோர்ட்டு அதிகமாயிருந்தால் போதும். அதிகமானால் ஒரு முன்சீப் கோர்ட்டு அதிகமாகலாம் என்றே வைத்துக்கொண்டாலும் 5 அல்லது 6 முன்சீப் கோர்ட்டுகளும் ஜில்லா ஜட்ஜி அதிகாரமுள்ள ஒரு மேல்கண்ட ஜட்ஜியும் 2 சப்ஜட்ஜியும் அதிகமாகக் காரணமென்ன? இதை பார்க்கும்போது இவ்வளவு கோர்ட்டுகளுக்கும் வக்கீல்களுக்கும் வேலை உண்டாக்கத்தக்க மாதிரிக்கு ஜனங்களே அயோக்கியர்களாகவும், சர்க்காரும் பார்ப்பனர்களும் பழக்கிவைத்திருக்கிறார்கள் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது. அல்லாமலும் முன் காலங்களில் முன்சீப்புகள் 5 மணி வரை வேலை செய்வார்கள்; சம்பளமும் அவர்களுக்கு 200, 300 தான். இப்போது 11-30 மணிக்கு கச்சேரிக்கு வந்தால் 2 அல்லது 3 மணிக்கு வீட்டுக்கு போய்விடுகிறார்கள்; சம்பளம் 500, 600 வாங்குகிறார்கள்.

இனியும் ஒரு கோர்ட்டு வேண்டுமாம்.

இவ்வளவும் போதாமல் இனியும் ஒரு சப் ஜட்ஜி கோர்ட்டு வேண்டுமென்றால் இவ்வியாக்கியத்தனத்திற்கு எதைச் சமமாகச் சொல்லுவது; இதையும் நமது ஜில்லாவில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஊருக்கு வரும்படி எதிர்பார்க்கிறார்களாம்.

கோர்ட்டு வந்தால், வந்த ஊருக்கு ஏற்படும் கேடுதி.

எந்த ஊரில் வைத்தாலும் வேலை ஏற்படும் என்கிற விஷயத்தில் நமக்கு சந்தேகமில்லை. அப்பீல் செய்ய இஷ்டமில்லாதவனுக்கெல்லாம் அப்பீல் செய்து பார்க்கலாம் என்கிற ஆசை வந்துவிடும். விவகாரத்தில் ஆசை இல்லாமலும் அசலூருக்குப்போய் விவகாரம் செய்வதில் சௌகரியமில்லாமல் தங்களுக்குள்ளாகவே பைசல் செய்து கொள்ளலாம் என்கிறவர்களுக்கெல்லாம் உள்ளூரில் கோர்ட்டு வந்துவிட்டால் பிராது செய்துவிடலாம் என்கிற எண்ணம் ஏற்பட்டு விடும். அலக்ஷியமாகவும் அனுவசியமாகவும் மறதியில் இருந்த வழக்குகளுக்கெல்லாம் வக்கீல்கள் முதன்மை ஸ்தானம் கற்பித்துக் கொடுத்து வழக்கிலிழுத்துவிட்டுவிடுவார்கள். இன்னமுமா எவ்வளவோ கஷ்டங்கள் அவ்வூரிலுள்ள எழைக்குடி மக்களுக்கு ஏற்பட்டு விடும். முகலாவது வீட்டு வாடகை உயர்ந்துவிடும். காய், கறி, மோர், தயிர், பால், நெய், விறகு விலைகள் உயர்ந்து விடும். கூலி ஆட்களின கூலி அதிகமாய் விடும். ஜனங்களுக்குள் கட்டுப்பாடும் பெரியவர் சிறியவர் என்கிற மரியாதையும் மாறிவிடும். இவ்வளவு அக்கிரமங்களோடு நாணயமும் குறைந்து விடுமே. இவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுவதாயிருந்தாலும் ஒரு வகுப்பாரின் வயிற்றுப்பிழைப்புக்கு கோர்ட்டுகளை அதிகப்படுத்துவதே தேச சேவையாயும், இதற்கு கனகூலமாயிருக்கும் அதிகாரிகளை பூரணகும்பம் எடுக்கத்தக்க யோக்கியதை உள்ளவர்களாகவும் போய்விட்டது. இந்தக் கூட்டத்தார்தான் நமக்கு சுயாராஜ்யம் வாங்கிக்கொடுக்கத்தக்க யோக்கியர்களாம்.

விவகாரக்காரருக்கு ஏதாவது வசதி உண்டா?

இவ்வளவு அக்கிரமங்களுக்கிடையில் ஏற்படுத்தப்படும் கோர்ட்டுகளில் விவகாரக்காராகளுக்குஏதாவது கடுகளவு சௌகரியமோ யோகியதையோ அல்லது அவர்களையும் ஒரு மனிதர்களாய்கருதத்தக்க நிலைமையோ இருக்கிறதா என்று பார்த்தால் அது கொஞ்சமாவது நினைக்கத்தக்க காரியமே அல்ல. நியாயாதிபதியாயிருக்கிறவர் பொது ஜனங்களின் பணத்திலிருந்து மாதம் 500, 1000, 2000, 3000 சம்பளம் வாங்கிக்கொண்டு மோட்டாரில் வந்து இறங்குவதும், தினை அரையில் இளைப்பாறுவதும், பங்கா வீசுவதும், பக்கத்தில் சேவகர்கள் கைகட்டிக் கொண்டு நிற்பதும், தனி கக்கூசு, தனி கிற்துண்டி. அரை ஆகிய போக போக்கியமும்—விவகாரக்காரரை எமாற்றி 50, 100, 1000, 2000 என்பதாக பீசு வாங்கும் வக்கீல்கள் குதிரை வண்டிகளிலும், மோட்டார் கார்களிலும் வந்து இறங்குவதும், பங்காவின் கீழ் உட்காருவதும், தங்களுக்கென இளைப்பாறும் அறைகளுமான போகபோக்கியங்களும் அடைவதுமாயிருக்கிறார்களே ஒழிய விவகாரக்காரைப்பற்றியோ, விவகாரத்தின் பொருட்டு, சாட்சிக்கு வருகிறவர்களைப்பற்றியோ, கொஞ்சமாவது கவலையே இல்லை. கோர்ட்டுகளில் விவகாரக்காரருடைய பரிதாபம் அவர்கள் உட்கார சௌகரியமில்லை தங்க இடமில்லை, ஒதுங்க மார்க்கமில்லை! வாய்பேச மார்க்கமில்லை. கோர்ட்டு எல்லைக்குள் இருக்குமவரை ஜபிலில் கைதி இருப்பதுபோல் பயந்து ஒடுங்கி நிற்கவும், ஏதாவது ஒருவருக்கொருவர் வாயைத்திறந்தால் அங்குள்ள சேவகர்கள், "உஸ்" "அஸ்" என்று இடையன் ஆடு மாடுகளை ஓட்டுவதுபோலவும் "பேசாதே" என்று மரியாதை இல்லாமல் கட்டளையிடுவதுமான ஹீனத்தன்மைக்கு ஆளாகவேண்டியதேயல்லாமல் அங்கு வாதியாகவோ பிரதிவாதியாகவோ சாட்சியாகவோ வருகிறவர்கள் மனிதர்கள் என்று எண்ணிய மாதிரியாய் ஏதாவது காணப்படுகிறதா? அல்லாமலும் கோர்ட்டுகள் மெத்தை மீது சில முக்கிய சமயங்களில் சிலதும் இருப்பதால் கூப்பிட்டாலும் காது கேட்கத்தக்க அவ்வளவு தூரதாவது நிறுத்தக் கூட இடமில்லாமல் இருப்பதோடு வக்கீலிடம் பேசவோ, ஏதாவது ஒரு விஷயத்தைச்சொல்லவோ இடமில்லை.

வாய்தாக்கள்.

இத்தனையும் போதாமல் ஒரு விவகாரத்தை 3வது 4வது டீட்டி 25-வாய்தா 30-வாய்தா போடும் உபத்திரவங்கள் அல்லாமல் காலை 11 மணிக்கு கோர்ட்டுக்குள் நுழைந்தால் மாலை 5 மணிவரையில் என்று கொண்டேகாத்திருக்கவேண்டும். சிலசமயங்களில் இன்று கேஸ் நடக்காது என்று தெரிந்தாலும் 5-மணிவரை வாய்தா ஏறபொழுது என்பதை தெரிவதற்குக்காத்திருக்கவேண்டும் எப்பொழுது நடக்கும்? இந்த வாய்தாவில் நடக்காதா? என்கிற விவரங்கள் கட்சிக்காரோ சாட்சிக்காரரோ அறிய வசதியில்லை. இதனால் இவர்களுக்கு கட்டும் சாட்சிப படி போக வர செலவு, மனக்கேடு எவ்வளவென்பதைப் பற்றியாருக்கும் கவலை இல்லை. ஜட்ஜி பெஞ்சாதிக்கு காலில பரும்பு கடித்துவிட்டால் அன்றைய கேசுகள் முழுவதும் வாய்தா போட்டாய்விடுவதுகில் வீட்டில் அம்மாவாசை சமயலுக்கு கோமாய் வீட்டால் குமஸ்தா வாய்தா வாங்கி விடுவான். வக்கீலுக்கு வேறு கோர்ட்டுக்குப்போக வே

இயிருந்தால் கேசை மாலேயில் எடுத்துக் கொள்ளும் படி ஜட்ஜைக்கேட்டு வாய்தா வாங்கிவிடுவான். இப்படி எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. நிற்க, சாட்சிக்கு உடம்பு சௌகரியமில்லாவிட்டால் டாக்டர் களுக்கு 20, 30 கொடுத்து சர்ட்டிபிகேட் வாங்கவேண்டும். வேறு அவசர வேலை இருந்தால் 20, 30 கொடுத்து வயிற்றுக்கடுப்பு என்று பொய் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டும். இப்படியாக எவ்வளவு கொடுமைகள் வியகாரக்காரருக்கு இருந்து வருகிறதென்பதும் வாய்தாக்கள் ஏற்படுவதற்கு சட்டசிக்காரர்களாலா அல்லது வக்கீல்களாலாஜட்ஜி களாலா என்பதைப் பார்த்தால் 100க்கு 90 வியகாரங்களுக்கு ஜட்ஜிகளும் வக்கீல் களுமேயல்லாமல் வாதி பிரதிவாதி காரணமேயில்லை என்பதும் விளங்கும்.

மேல் அதிகாரிகளோ?

இவற்றைப்பற்றி மேல் அதிகாரிகளுக்கு எழுதினால் "அசல் அநியாயம் அபீல் அதுவே காயம" என்பது போல் "இதல் லாம் சகஜம்தான" என்று சொல்லுவார்கள். காரணம் என்னவென்றால் முனிசீப்பு ஸ்தானமுதல் ஹைகோர்ட்டுஜட்ஜி, சட்டமெம்பர் ஆகிய ஸ்தானம் வரையில் இந்த வகுப்புக் கூட்டத்திலிருந்தும் இதனாலே வபிறவளர்க்கப்பட்டதும் கூட்டத்திலிருந்துமே தான் ஆள் பிடிக்கிறார்களே தவிர வேறில்லை. வக்கீல் கூட்டத்திலிருந்து நியாயாதிபதிகளோ நியமிப்பது என்கிற அக்கிரமம ஒரு நாட்டில் இருக்கும்வரை பாப்பன ஆதிக்கமும விவகாரமும வலுக்கவும், குடியானர்கள் நாசமாய்ப்போகவும், நாடு குட்டிச்சுவராகவும் தான் ஏற்படுமே அலலாமல் ஒரு நாளும் நாம் உருப்படியாகி சுயாஜ்யம பெறப் போவதில்லை என்பது உறுதி.

ஸ்ரீரங்கம் கோவில்:— ஸ்ரீரங்கம் கோவிலின் செலவிற்கு வரவு கட்டவில்லை யென்று சிலபிரமுகர்கள் ஐயபதினாயிரம் ரூபா கோவிலுக்குச் சேர்க்க லகூத்து இருபத்தோராயிரம் ரூபா வசூலாகவேண்டிய லாடரி ஒன்று ஏற்பாடு செயதிருக்கின்றனர். இப்பணத்தால் நிலங்கள் வாங்கி கோவிலின் மூலதனத்தை வளர்க்கும் நோக்கத்தை யாம மெச்சுகின்றோமாயினும் கோவிலுக்கு ஏற்கனவேயுள்ள ஏராளமான நிலங்கள் பாதீனப்பட்டிருப்பதை இப்பிரமுகர்கள் ஏன் கவனிக்கவில்லை? உதாரணமாக வெள்ளித் திருமுத்தம் கிராமத்தில் மாத்திரம் சுமார் 300 ஏக்கர்வரை பிறர்வசப்பட்டு அவரிவந்தப்படி கிரய பாதீனங்களாயிருக்கின்றன. இந்த லாட்டரியில் வரும் ஐம்பதினாயிரத்துக்கு நிலங்கள் வாங்கி விட்டாலும்இக்கதாகாலமாகும்.இவ்விலங்கோப்பற்றி எந்தகமிட்டிமெம்பராவதுதிராண்டியாவதுசிரத்தை எடுத்துக்கொண்டதுண்டா? சுவாமிக்கு லாட்டரி மூலம் சம்பாதிப்பது கேவலமல்லவா? இந்த ஐம்பதினாயிரம் வந்தால் இக்கோவிலின் தரித்திரம் நீங்கி விடுமா? என கோவிலதிகாரிகள் சற்றுப் பிரயாணம் செய்து சம்பாதிக்கக்கூடாது? கோவிலுக்கு வரவேண்டிய ஆயிரக்கணக்கான ரூபாய் கள் கோர்ட்டுகளில் டிகிரியாயிருந்தும் நிறைவேற்றப்படாமல காலாவதியடைய விட்டகாரியத்தை என்னென்றுரைப்பது? கோயிலில் உபயோகிக்கப்படக்கூடாமல் கிடக்கும் ஆபரணங்கள் தங்க வெள்ளி உலோகங்கள், பாத்திரம் வகையராக்கள் வஸ்திரங்கள் விக்ரகங்கள் முதலியவற்றை எலம் போட்டு விற்று பணமாகச் செய்யக்கூடாதா? என்று ப. இ. ரா. அறிவிக்கிறார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

கிறார்கள். சமூகத்தைப்பற்றி கவலை எடுப்பது அரிது தங்கள் பெண்ணிற்கும் பிள்ளைக்கும் பத்து விருந்து பதிமூன்றுக்குள் சாந்தி முகூர்த்தம் செய்வதும் சுபபுவதுமில்லை. பின் சாஸ்திரம் படித்த பண்டிதர்கள் புத்திக்கு எட்டாத விஷயத்தையும் நாட்டிற்கு ஒத்து வராததையும் தர்க்கம் பண்ணி தங்கள் காரியங்களில் சௌகரியம் போல் செய்து கொண்டு மற்றவர்கள் காரியத்தில் சாஸ்திரமென்றும் கலியின் கூற்றென்றும் சொல்லுவார்கள். அவர்கள் படித்த படிப்பில் எட்டு வயதில் ருதுவாகுலும், ருதுவான மூப்பதாம் மாளில் சாந்திமுகூர்த்தத்தை கடத்திவிடலாமென்றிருக்கிறது.பின்பிரபுக்களுக்குமோட்டார்வாங்கவும்கடன் வாங்கவும் கொடுக்கவும், விருந்து செய்யவும், விருந்திற்குப்போகவும், வக்கீல் டாக்டர்களிடம் தபிப்பிராயம் கேட்கவும், தங்கள் பெருமையைப் பேசவும், கேட்கவும், தின்னவும், தூங்கவும், நேரமிருக்கிறதே ஒழிய சமூகத்தைப்பற்றி கவனிக்க நேரமில்லை. எங்கள் குழந்தைகள் சுகமாய் வளர்க்கப்பட்டு நின்று பெருத்து இருப்பதால்10 வயதில் கூட ருதுசாந்தி அருமையாய் செய்யலாமென்ற விவகாரமும் பேசுவார்கள். பின் குருசந்நிதானங்களோ பல்லக்கு ஏறவும் பாதகாணிக்கை வாங்கவும் சிஷியர்களுக்கு பிரசாதம் கொடுக்கவுந்தான் நேரம். பின் சாதாரண ஜனங்கள் வார்த்தைக்கோ மதிப்பில்லை நேரமில்லை சமயோஜிதமாக நடந்தபடி பேசவும் வேண்டும். பூ, சந்தனம், அரிசி, பருப்பு, இருக்கையிலே சாந்தி முகூர்த்தம் முடியவும் வேண்டும். இப்படி இருக்கிறது நமது சமூகம். இந்த நிலைமையில் ராஜாங்க சட்டம் சமூகத்தை சீர் திருத்திஞல் முடியுமே ஒழிய நமது சமூகத்தால் ஒன்றுமே முடியாது. இந்த மஹாசாதா சட்ட சபையில் வாதிப்பது அன்னியருக்கு நம் பேரிலுள்ள மதிப்பைக் குறைக்கும். நாம் எதற்கும் லாயக்கற்றவர்கள் என்று காண்பிக்க இந்த ஒரு மஸோதாவேபோதும். இதையெல்லாம் கவனித்து சட்ட சபையில் நம் மெம்பர்கள் 14 வயதை 16வயதாக உயர்த்தி சட்டமாகச் செய்யவேண்டும். டாக்டர் சர் அரிசிங் கௌர் சம்மத வயதை 16 ஆகக்கொண்டுவந்திருப்பார் 14 வயதிற்கே நாம் ஒத்துக்கொள்ளாத பயம். அவருக்கு அச்ச பயத்தைத் தீர்த்து எல்லாரும் 16 வயதாகச் செய்யுங்கள்.

"திருவள்ளுவர் பூசையும் "திருவள்ளுவர் கழக" நிறுவப்பு விழாவும்:— தென்காசியில் திருவாளர் சுப்பிரமணிய தாஸ் அவர்களுடையபேரூக் கத்தாலும் மற்ற ஜனங்களாலும் மே. விழா திரு ஆர். பி. சேதுப்பிள்ளை பி.ஏ. பி. எல். அவர்கள் தலைமையில்மிகு சிறப்பாக நடைபெற்றது. 2000பேர்கலந்துகொண்டனர். சுமார் ஆயிரம் எழைகட்கன்னமளிக்கப்பட்டது. மாலையில்திருவள்ளுவர் திருவுருவப்படத்தை அலங்கரித்துயானை மேல் வைத்து பாண்டு முதலிய வாத்திய கோஷத்துடன் நகர்வலம் செய்யப்பட்டது. மாலை தென்காசி காசிவிஸ்வநாத சுவாமிகோவிலில் ஸ்ரீமான்கள் நாராயணாத சேசிகர், செந்தில் விநாயகம் பிள்ளை சுந்தர ஓதுவார் மூர்த்தி, சுப்பிரமணிய தாஸ், சச்சிதானந்தம் பிள்ளை எம் எ முத்துக்குமாரசாமி பிள்ளை முதலிய அறிஞர்களால் திருக்குறள் திருவள்ளுவர்பெருமை முதலிவற்றைப்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். இடையிடையே சபையோர் மனம்குளிரும்படி சுந்தர ஓதுவார் மூர்த்தி கோஷ்டியார் இன்னிசைக்கருவிகளுடன் தேவாராதிகள் பாடினர்கள். மறுநாள் சுந்தர ஓதுவார் மூர்த்திகளால் இக்கழகத்தின் ஆதரவில் நந்தனர் சரித்திரம் நடத்தப்பட்டது என்று மே. கழக அமைச்சர் ஸ்ரீமான் கோமதிநாயகம் பிள்ளை அறிவிக்கிறார்.

மருத்துவர் சங்கம் மதுரை:—சென்னை முதன் மந்திரியார் மதுரைக்கு வந்தகாலத்தில் 6-2-27 தேதியில் மதுரையிலுள்ள மருத்துவர்களெல்லாம் ஒருங்கு கூடி ஸ்ரீமான் எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்கள் வீட்டில் மே. மந்திரியாரை பேட்டிகண்டு மதுரை நகரபரிபாலன சபையிலும், ஜில்லாபோர்டிலும் முனசத்தினர் பதவி கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தனர். அதை வாசித்து விட்டு மே. ஸ்தானங்கள் காலியாகும்போது மனுக்கொடுத்தால் ஏற்பாடு செய்கிறேனென்று பதிலளித்தார் என்றுடருத்துவர் சங்கக்காரியதரிசி அறிவிக்கிறார்.

* * *

கற்பூரச்செட்டியார்களின் கூட்டம்:— 18-2-27 தேதியில் சூரம்பட்டி கருவண்டராயஸ்வாமி கோவிலில் மேஜூர் அருமைக்காரர் ஸ்ரீமான் மார்ப்பகவுண்டர் தலைமையில் நடைபெற்றது. பலர் வெளியூர்களிலிருந்தும் வந்திருந்தனர். தமது குலதெய்வ உற்சவம் மஹாசிவராத்திரி காலத்தில் ஒற்றுமையுடன் நடத்தவேண்டுமென்றும், இக்கொங்குமண்டல கற்பூர செட்டியார் சங்கத்தை ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்றும் ஏகமனதாய் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று ஸ்ரீமான் ஏஸ். ஆர். ராஜா நாயக்கர் அறிவிக்கிறார்.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி திணுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக திணுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர். துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா).

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும, சுவற்றிலும், வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திராளானஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்து அனுப்பப்படும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

பாரீஸ் எம்போரியம், ஜி. டி.
மதராஸ்.

போர்டுகளும் ஆதித்திராவிடர்களும்

தாலூகா போர்டு ஜில்லா போர்டுகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிணறு, பள்ளிக் கூடங்களும் தேவை என்பதாக பட்ஜெட்டிலும் ரிபோர்ட்டிலுமிருக்கிறது. இப் போர்டுகளிலிருந்து கிணறு வெட்டியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெட்டியுமிருக்கிறது. வெட்டியுமிருக்கிறது. வெட்டியும

நமக்கேற்ற நவீனக நாவல் நாவலிற்சிறந்த நவீனக நாவல்

உங்கள் ஆர்டரை உடனே எழுதுங்கள்

அலாவாதிர்ஷ்டவசம் அதிலா மிதுநிஜம் ஆனந்த ரகசியம் அற்புத ஜோசியம்.

அனைவரும் படித்து அதிசயிக்கக்கூடிய

இரங்கூன் இரகசியம்.

ஓர் இனிய செந் தமிழ் நாவல்.

செந்தமிழ்ச் சகோதரர்காள்! எடுத்துப்படித்து முடிக்கும்வரை கீழேவைக்க மனமிராது. காரீகம், கவீனகம், புதினம், கற்பனை, கற்பிதம் முதலிய அலங்கார மமைந்தது. அறிவை விளக்கி அகமிழச்செய்வது. மோசம் நாசம் கம்பளி வேஷம் போடும் வயிற்றுப் பிழைப் பானின் சாமர்த்தியத்தை விளக்கிக்காட்டுவது. அந்திய தேச ஜீவனும்ச கஷ்ட நஷ்டத் தின பலனை போதிப்பது. சதிபதிகளின் சமுசார வாழ்க்கைத்தினை கலம் சாற்றுவது. பேராசை பெருநஷ்டமென்னும் புத்தி புகட்டுவது மனதின் சஞ்சலத்தை நீக்கிச் சந்தோ ஷம் கொடுப்பது. மாயப் பரதேசிகள், வழிப்றிக் கொள்ளைக்காரர்களின் வஞ்சகச் செயலை உள்ளங்கை நெல்லிக்கனிபோ லெடுத்துக்காட்டும் இன்றியமையாத இயல்புடைய முதல்தர மான நாவல். 200 பக்கம் அழகிய பிரிண்ட், அருமையான ராப்பர் பயிண்டு.

புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0. வி. பி, தபால் செலவு வேறு.

விலாசம்:—பஞ்ச சக்தி புத்தகசாலை,
தபால் பெட்டி P. நெ. 1051, 63, 29-வது கல்லி, இரங்கூன்.

பாரம்பரியமாகக் கையாண்டு வருவது ஒரே முறை பரீட்சியுங்கள்

கைகண்ட அனுபவமுள்ளது உண்மை கண்டு மகிழுங்கள்

அகத்தியர் மகா சந்தனுதித் தைலம்.

இதுவரை எவ்வளவோ தைலங்கள் இப்பெயரால வெளிவந்திருப்பினும் அவைகளுந் செல்லாம் சிரோரத்தனமாக விளங்குவது இந்தத் தைலமே. இதை ஒருமுறை உபயோ கித்தவர்கள் ஒருநாளும் கைவிடமாட்டார்கள் என்பது திண்ணம். பிரமேயம், கைகா லெரிவு, கண்ணெரிவு, புளகச்சல், சொரிசிரங்கு, புழுவெட்டு, ரணகிரந்தி, கூயம், பித்த மயக்கம், அஸ்திசுரம், வெட்டை, முதலியவைகளை ஆச்சரியகரமாய்ச் சுகப்படுத்துவதில் நிகரற்றது. 24 அவுன்ஸ் உள்ள பாட்டில் 3—8—0, 12 அவுன்ஸ் 2—0—0

திரிலோக செந்தூரமும் மகா விஷ்வாதி இலேகியமும்.

கைகால் எரிவு, சுரம் 64, பித்தம் 40, சகல வாய்வுகள், அதிசாரம், அன்ன துவேஷம், வெள்ளோக்காலம், கூயம், சூலை முதலியன நீரும். 48 நாள் லேகியத்தில் வைத்துச் சாப்பிடக்கூடிய செந்தூரமும் லேகியமும் விலை 3—0—0.

போஜன சஞ்சீவி தாதுவிர்த்தி இலேகியம்.

இதைச் சாப்பிடுவதால் அசுத்த ரத்தம் சுத்தியாகி விர்த்தித்து விந்து கட்டும். சகல வாய்வு ரோகங்களுந் நீரும். மூலக்கிராணி, வயிற்றுப்போக்கு, இருமல், கூயம் முதலியன நீர்ந்து வச்சிர தேகம் ஆகும். எல்லா மருந்துகளுக்கும் இச்சா பத்தியம். தபால் கூலி வேறு. இன்னும் அநேக மருந்துகளடங்கிய கேட்லாக் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புவோர் களுக்கு அனுப்பப்படும். சேர் 1-க்கு விலை 2—0—0, அரை சேர் 1—4—0.

உபயோகமுறை மருந்துடன் அனுப்பப்படும்.

பண்டிதர் க. பிச்சைமுத்து, நேட்டிவ் டாக்டர்,
பிரமமூனி சித்த வைத்தியசாலை,
கீழப்பாலக்கரை, திருச்சினாப்பள்ளி.

இனம்! இனம்!! இனம்!!!

ஜீவானந்த கைத்தொழில் போதினி

என்ற புத்தகத்தைப் பார்த்தீர்களா? இல்லை யானால் இன்றைக்கே 0—8—6 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். இதில் பன்னீர் சோப், கடுகுதைலம், வாசனை சோப், பரிமள சோப் பற்பொடி, தஞ்சனம் இவ்விதமான அபூர்வ 8 முறைகளடங்கியிருக்கின்றன. கொஞ்சம்பிரதி களே அச்சிட்டிருப்பதால் உடனே முந்துங்கள்.

விலாசம்:—S. V. இராமதாஸ் நாயுடு,
கைத்தொழில் புரொபஸர்,
செம்பொன்னூர் கோவில் (S.I.R.)



பெட்ரோமாக்ஸ் லட்.

லேட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலாயமாய் கிடைக்கும். மொட்டாக் இனம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

நமது அச்சுக்கூடத்தில்
பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்.

மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

குடி நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையால் மாதம் இருமுறை கதை ரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிர சுரிக்கப்படும் எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

எழை மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று தீர்மா னித்திருக்கிறது.

சந்தாவை முன்னதாகவே அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்.

மூட்டப்பூச்சி எமன்.

இதில் ஒரு சொட்டு பஞ்சில் எடுத்து எந்தச் சந்துகளில் ஆயிரக்கணக்காய் மூட்டைப் பூச்சிக ளிருக்கின்றனவோ அந்த விடங்களில் தடவினால் அந்த க்ஷணமே அடியோடு அவ்வளவும் அழிவது நிச்சயம. சுண்ணாம்புடன் கொஞ்சம் கலந்து சுவற்றில் பூசிவிட்டால் அந்த வம்சமே அழிந்து விடும். 2 அவுன்ஸ் புட்டி 1-க்கு 0—15—0

பாக்கெட் டாக்டர்.

இது எல்லாவித நோய்களுக்கும் பெரிய சஞ் ஜீவி. தாளி, கணக்காய் சாப்பிட்டு அநேக ஜமீன் தார்கள் முதல் விருத்தாப்பியர்வரை சுகமடைந் திருக்கிறார்கள். ஒருதடவைவாங்கி பரீக்ஷியுங்கள்.

புட்டி 1-க்கு ரூ. 1—8—0

புகையிலை துண்டுகள்

காங்கய நாடடிலிருந்து லக்ஷக்கணக்காய் பாலகாடு முதலிய இடங்களுக்கு போகிறது. இது இங்குதான் உற்பத்தி. திடம் 100 துண்டு கள் 100 தடவை போடக்கூடியது ரூ. 0—10—0.

K. V. வேலுமயிலு முதலியார்,
மயிலர் திருமாளிகை, காங்கயம்.

இனம்! இனம்.

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனம்.



எங்கள் 18 காரட் சோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப் பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிற வர்களுக்கு மேலேசொல் லியபடி பௌண்டன் பேனாஇனமாய் அனுப்பப் படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.